# சிலாங்கூர் இன்று

இலவசம்

www.selangorkini.my Media_Selangor SelangorTV selangortv.my MediaSelangor SMART SELANGOR

SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2054 / சோபகிருது வருடம் ஆவணி மாதம் / செப்டம்பர் 09/2023 / SEPTEMBER 09/2023


## இந்தியர்கள் வாக்களிக்க வரவேண்டும் - மந்திரி புசார்

**ஷா ஆலம்,** இம் மாதம் 12ஆம் தேதி நடைபெற இருக்கும் மாநிலத் தேர்தலில் இந்திய சமூகம் பக்காத்தான் ஹரப்பான் கூட்டணிக்கு முழு ஆதரவை வழங்கி சிலாங்கூரில் மூன்றில் இரு மடங்கு பெரும்பான்மை இடங்கள் பெறுவதை உறுதி செய்ய வேண்டும் என சிலாங்கூர் இந்திய ஆலோசக மன்றத்தின் தலைவர் சார்லஸ் சந்தியாகோ வலியுறுத்தினார்.

சிலாங்கூர் மாநில அரசு வலுவுடன் இருப்பதை உறுதி செய்ய இந்த பெரும்பான்மை அவசியம் என்று கிள்ளான் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அவர் சொன்னார்.

இங்குள்ள மிட்லண்ட்ஸ் தமிழ் பள்ளி மண்டபத்தில் நடைபெற்ற டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் அரசாங்கத்திற்கு இந்திய சமூகத்தின் ஆதரவை புலப்படுத்தும் நிகழ்வில் உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

சிலாங்கூர் மாநிலத்தில் 56 தொகுதிகள் உள்ளன. அவற்றில் 35 தொகுதிகளில் இந்தியர்களின் வாக்கு 10 விழுக்காட்டிற்கும் அதிகமாக உள்ளது. ஆகவே, மாநிலத்தில் வெற்றியை உறுதி செய்யும் துருப்புச் சீட்டு இந்தியர்கள்.

இந்த வெற்றியின் மூலமே இந்த நாட்டைக் காப்பாற்றுவதற்கான நிலைத்தன்மையை பாதுகாப்பதற்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கும் இயலும் என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக இந்த நிகழ்வில் உரையாற்றிய அமிருடின், மிட்லண்ட்ஸ் தமிழ்ப்பள்ளி மாணவர் தங்கும் விடுதியைப் பராமரிப்பதற்கு மாநில அரசு தொடர்ந்து நிதியுதவி வழங்கி வரும் என்றார்.

கடந்த 2018ஆம் ஆண்டு முதல் சிலாங்கூரில் உள்ள தமிழ்ப்பள்ளிகளின் வளர்ச்சிக்கு ஆண்டுதோறும் 50 லட்சம் வெள்ளியை அரசாங்கம் மானியமாக வழங்கி வருகிறது. இது தவிர மிட்லண்ட்ஸ் தமிழ்ப் பள்ளி மாணவர் தங்கும் விடுதியின் பராமரிப்புக்கு கூடுதலாக 300,000 வெள்ளியை இவ்வாண்டில் அது வழங்கியுள்ளது. 200 மாணவர்கள் வரை தங்கி படிக்கும் வசதி கொண்ட இந்த விடுதியின் செயல்பாட்டிற்கு அரசு தொடர்ந்து மானியம் வழங்கி வரும் என்றார் அவர்.

சிலாங்கூர் மாநிலத்தில் பக்கத்தான் ஹராப்பான் கூட்டணிக்கு இந்தியர்கள் வழங்கும் ஆதரவுக்கு நன்றி தெரிவித்துக் கொண்ட அவர் 80 விழுக்காடாக உள்ள ஆதரவை 100 விழுக்காடாக உயர்த்த மாநில மந்திரி புசார் வேண்டுகோள் விடுத்தார். அத்துடன் இந்த முறை இந்தியர்கள் வாக்களிப்பதற்கு வரவேண்டும் என்பதே தற்போதைக்கு மிகவும் முக்கியமானதாகும் என்றும் அவர் சொன்னார்.




## மாநிலத் தேர்தலில் ஹராப்பான் - பி.என் கூட்டணிக்கு

# ம.இ.கா ஆதரவு

**ஷா ஆலம்,** வரும் 12ஆம் தேதி நடைபெற இருக்கும் மாநிலத் தேர்தலில் பக்கத்தான் ஹராப்பான் கூட்டணிக்கு முழுமையான ஆதரவை வழங்க மஇகா முடிவு எடுத்துள்ளது.

கடந்த புதன்கிழமை ஆகஸ்ட் 2 ல் மஇகா தலைமையகத்தில் பிரதமர் அன்வாருடனான சிறப்புச் சந்திப்பின் போது, டான் ஸ்ரீ விக்னேஸ்வரனும் மற்ற மஇகா தலைவர்களும், ஆறு மாநிலங்களின் தேர்தலின்போது ஒற்றுமை அரசாங்க வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்ய, பக்காத்தான் ஹராப்பான்-பி.என் தேர்தல் இயந்திரங்களுக்கு மஇகா கட்சி உதவும் என உறுதியளித்தனர்

தங்கள் ஆதரவை அவர்கள் இருக்கைகளில் இருந்து எழுந்து பிரதமரின் முன் உறுதிமொழி எடுத்த இக் கூட்டத்தில் துணைப் பிரதமர் டத்தோஸ்ரீ டாக்டர் அகமட் ஜாஹிட் ஹமிடியும் கலந்து கொண்டார்,

இந்திய சமூகத்தைப் பிரதிநிதிக்கும் கட்சியான மஇகாவின் இந்த முடிவு இந்திய சமூகத்தில் ஒற்றுமைக்கு வித்திட்டுள்ளது. நாட்டின் அரசியலிலும் புதிய பரிணாமத்தை ஏற்படுத்தியுள்ளதாக செந்தோசா சட்டமன்றத் தொகுதிக்கான பக்கத்தான் ஹராப்பான் வேட்பாளர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் வரவேற்றுள்ளார்.

பக்கத்தான் ஹராப்பான் கூட்டணிக்கு ஆதரவு தருவது என்ற மஇகா தேசிய தலைவர் டான்ஸ்ரீ எஸ்.ஏ.விக்னேஸ்வரனின் முடிவு பாரட்டப்பட வேண்டிய ஒன்று. இதர விவகாரங்களைக் காட்டிலும் சமூகத்தின் நலனுக்கு அக்கட்சி முக்கியத்துவம் தருவதை அக்கட்சியின் இந்த நிலைப்பாடு புலப்படுத்துகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மாநிலத் தேர்தலில் பக்கத்தான் ஹராப்பான் வேட்பாளர்களை ஆதரிக்கும்படி கட்சியினருக்கு மஇகா தேசியத் தலைவர் விடுத்துள்ள கோரிக்கை கருத்து வேறுபாடுகளை மறந்து சமூகத்தின் மேம்பாட்டிற்கான ஒன்றிணைந்து பாடுபடும் உயரிய நோக்கத்தை பிரதிபலிப்பதாக உள்ளது என்றார் அவர்.

இந்த ஒற்றுமையின் வழி அரசாங்கத்தில் இந்திய சமூகத்தின் குரல் ஓங்கி ஒலிக்கவும் அனைத்து நிலைகளிலும் இந்திய சமூகத்தின் நலன் பாதுகாக்கப் படுவதை உறுதி செய்ய பெரிதும் துணை புரியும் என அவர் சொன்னார்.

# இந்தியர்களின் ஓட்டுகளை சிதறடிப்பது மகாதீரின் சதிக்கு ஒத்துழைப்பது

**1.** இம்முறை நடக்கும் 6 மாநிலத் தேர்தல்களில் மட்டுமின்றி இனிமேல் மலேசியாவில் நடக்க உள்ள ஒவ்வொரு தேர்தலும் மலேசியாவின் சிறுபான்மை இனங்களான இந்தியர்கள் , சீனர்கள், பூர்வகுடியினர்,சபா மற்றும் சரவாக் மக்களுக்கும் மிக முக்கியம், அதில் தவறாமல் வாக்களிப்பதும் அவசியம்.

**2.** அதனால் இந்தியர்கள் கண்டிப்பாக ஓட்டளிக்க முந்த வேண்டும். நாம் நமக்கு அளிக்கப்பட்டுள்ள ஓட்டு உரிமையை கைவிட்டால், நம் பிள்ளைகளுக்கு, நமது எதிர்கால சந்ததியினருக்கு நாம் இழைக்கும் துரோகமாகும்.

**3.** இப்பொழுது நாட்டில் எல்லா அதிகாரங்களையும் கையில் வைத்துக் கொண்டு, அனைத்து சலுகைகளையும் அனுபவிக்கும் வர்க்கத்தின் அரசியல் பலம் ஆட்டம் கண்டு விட்டதாக இரண்டு முறை பிரதமராக இருந்த ஒரு பெருச்சாளி ஒரு சமுதாயத்தைத் தூண்டி விடுகிறது.

**4.** இன ,சமய விவகாரங்களைக் கையில் எடுத்துக்கொண்டு, ஏற்கனவே இந்நாட்டில் சிறுபான்மையினரின் உரிமைகளை நிர்மூலமாக்கிய துன் மகாதீர் , இனச் சமயத் தீவிரவாதக் கும்பல்களுடன் மீண்டும் கைகோத்து இருப்பது நமது எதிர்காலத்துக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தின் அறிகுறி.

**5.** இந்நாட்டு நடப்பை உன்னிப்பாகக் கவனிக்கும் அனைவருக்கும் தெரியும், நமது வாக்கு பலம் என்ன என்பது. அதனால் நம்மிடம் கரிசனம் காட்டும் அரசியல் தலைவர்கள் மற்றும் கட்சிகளுடன் நாம் இணங்கி செல்வதும், அவர்களுக்கு ஆதரவு வழங்குவதும் இயற்கையே. அதுமட்டுமின்றி கடந்த கால நிகழ்கால ஆட்சிகளின் திறமைகள் மக்கள் நலத் திட்டங்கள் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் முதலீடுகள் போன்ற பல அம்சங்களைக் கருத்தில் கொண்டு வாக்களிப்பது வாக்காளர்களின் திறமையை மதி நுட்பத்தைக் காட்டும்.

**6.** இன்று மகாதீர் தலைமையேற்றுள்ள தீவிரவாத கும்பல் மித வாதக் கட்சிகளை நிராகரிக்கப் பகிரங்கமாகக் கோரிக்கையை முன் வைத்து தேர்தலில் களம் இறங்கி உள்ளது. மக்களுக்குச் சுத்தமான குடிநீர் கூட வழங்க முடியாத கிளந்தான் போன்ற பின்தங்கிய மாநிலம் ஆகிவிடுமோ என்ற அச்சம் இங்குள்ளவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

**7.** இனச் சமயத் தீவிரவாதிகளின் வெற்றி, மிதவாதிகளின் தோல்வியாகிவிடும். அது நமது அடிப்படை உரிமைகளான குடி உரிமை, சமய உரிமை , மொழி உரிமைகளுக்கு அடிக்கும் சாவுமணி என்பதை உணராத, அறியாத கூட்டமே இந்தியர்களை இந்த தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என்கிறது.

**8.** நாட்டில், குறிப்பாகச் சிறுபான்மையினருக்கு வரக்கூடிய ஆபத்துகளை உணராத சிலர், சுய லாபத்தையும், துரோகச் சிந்தையை மட்டும் மனதில் கொண்டு செயல்படுவது, மகாதீரின் சமய, இனத் தீவிர வாதிகளுக்கே வெற்றி. அவர்களின் அரசியல் வெற்றிக்கு உதவுவது தூக்கு கயிற்றை சுயமாக எடுத்து நமது கழுத்துகளில் மாட்டிக் கொள்வதற்கு ஒப்பாகும்.

**9.** இந்தியர்களின் ஓட்டுகளைப் பல கூறுகளாக சிதறடிப்பது, மித வாதக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் இந்திய வேட்பாளர்களை தோற்கடிக்கும் சதி. மகாதீர் தலைமையிலான பி.என் மற்றும் பாஸ் கட்சிகளின் சமய, இன தீவிரவாதிகளின் வெற்றிக்கு கை கொடுப்பதாகும். இந்தியர்கள் மகாதீரின் சதிக்கு துணை போகலாமா?

இது நமது எதிர்காலத்தை நேர்த்தியானதாக்க, நம் பிள்ளைகள் அடுத்த தலைமுறையினரின் சிறந்த எதிர்காலத்தை உறுதி செய்ய, இந்நாட்டில் அனைவரும் நிம்மதியாக வாழ, நாம் ஒற்றுமையாகத் திறமையான மிதவாத கட்சிகளுக்கு வாக்களிப்போம். நமது ஓட்டுகளைச் சிதறாமல் ஒற்றுமையான திறமையான அணிக்கு அளிப்போம். நமது எதிர்காலத்தை நாமே தற்காப்போம்.



# கோல்ட்பில்ஸ் தோட்ட தமிழ் பள்ளி விவகாரம் விரைவில் தீர்வு

**ஈஜோக் கோல்டு பில்ஸ்,** கோல்ட்பில்ஸ் தோட்ட தமிழ்ப்பள்ளி விவகாரம் குறித்து தீர்வு காண அரசு சார நடவடிக்கையாளர் மணிமாறன் மாணிக்கம் சிலாங்கூர் மாநில மந்திரி புசாரை அழைத்து வந்திருந்தார். பள்ளிக்கு உடனடியாக வருகை தந்து பள்ளி எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பேன் என்று மந்திரி புசார் அமிருடின் சாரி அறிவித்தார்.

பள்ளியின் மின்சாரக் கட்டணம் வாணிப கட்டணமாக இருக்கிறது. அதனால் மின்சாரக் கட்டணம் உயர்ந்துள்ளது. இதற்கு தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதற்கு உடனடியாக தீர்வு காண்பேன். பள்ளியில் திடல் பிரச்சனையாக உள்ளது. இந்த திடல் பிரச்னைக்கும் முறையாக தீர்வு காண்பேன். அடுத்து பள்ளியில் தற்போது மாணவர்கள் அதிகரிக்க தொடங்கி விட்டனர். தற்போது 170 மாணவர்கள் படிக்கின்றனர். இதனால் இடப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்த பிரச்சனையை மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு செல்வேன்.

அருகில் துவான் மீ தோட்ட தமிழ் பள்ளியும் உள்ளது. பண விரயம் இல்லாதவாறு முறையாக தீர்வு காணப்படும். சிலாங்கூரில் உள்ள 98 தமிழ் பள்ளிகளுக்க வருடந்தோறும் சிலாங்கூர் மாநில அரசு நிதியுதவி செய்து வருகிறது என்று அவர் மேலும் கூறினார்.

காலை 8.30 மணிக்கு வட்டார அரசியல் தலைவர்கள் வரத் தொடங்கினர். ஆனால் அதற்கு முன்பே மாவட்ட கல்வி இலாகா அதிகாரிகள் வருகை தந்து விட்டனர். ஏற்கனவே பெயர் பதிவு செய்தவர்கள் மட்டுமே பள்ளிக்குள் அனுமதிக்க முடியும் என்று தடுத்து நிறுத்தி விட்டனர்.

மந்திரி புசார் குறித்த நேரத்தில் பள்ளி வந்தடைந்தார். பள்ளிக்கு சென்று பள்ளி நிர்வாகம் , வாரிய பொறுப்பாளர்களோடு கலந்து பேசிய பின்னர் செய்தியாளர்களை பள்ளிக்கு வெளியே சந்தித்த போது மேற்கண்டவாறு கூறினார்.

# ஒற்றுமை அரசு பாகுபாடு காட்டவில்லை அனைத்து இனங்களையும் சமமாக நடத்துகிறது

**செமினி,** ஒற்றுமை அரசாங்கம் நாட்டில் எந்த இனத்தையும் ஒருபோதும் ஒதுக்கி வைக்கவில்லை. மாறாக, அறிமுகப்படுத்தப்பட்ட அனைத்து திட்டங்களும் கொள்கைகளும் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கியவை என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.



ஒற்றுமை அரசாங்கம் ஒரு சார்புடையது என்று சில தரப்பினரின் கூற்றுக்களை நிராகரித்த அவர், ஒற்றுமை அரசாங்கத்தின் உதவிகள் மற்றும் முன்னெடுப்புகளை இனம் அல்லது மத முன்னுரிமை இல்லாமல் சமூகத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் உள்ளவர்கள் அனுபவிக்கின்றனர் என்றார். அரசாங்கத்திடம் அதிக பணம் இல்லாவிட்டாலும், எந்தவித பிரதிபலனும் இன்றி மக்களுக்கு சேவை செய்வதில் அது உறுதியாக உள்ளது என்று பிரதமர் கூறினார்.

அரசாங்கத்திடம் பணம் அதிகம் இல்லை. ஆனால் நாங்கள் மோசடி செய்யாமல் அல்லது தனிப்பட்ட நலனுக்காக பயன்படுத்தாமல் இருப்பதால் இறைவன் அருளால் அந்த பணத்தைக் கொண்டு மக்களுக்கு உதவ முடிகிறது.

நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், நீங்கள் ஆதரித்தாலும் ஆதரிக்காவிட்டாலும் ஒற்றுமை அரசாங்கம் இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் ஆதரவாக இருக்கும் நிலைப்பாட்டை ஒருபோதும் மாற்றிக்கொள்ளாது என்பதை நான் வலியுறுத்துகிறேன் என்று அவர் தெரிவித்தார்.

சிலாங்கூர் மாநிலத் தேர்தலை முன்னிட்டு செமினியில் நேற்றிரவு நடைபெற்ற ஒற்றுமை பிரசாரப் பயணத் தொடரில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

நாட்டில் அனைத்து இன மக்களுக்காகவும் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டங்களில் வறுமையை, குறிப்பாக பரம ஏழ்மையை ஒழிப்பதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கையும் அடங்கும் என்று பிரதமர் கூறினார்.

# தவறாது வாக்களியுங்கள்
## அன்வார் கோரிக்கை



**சிப்பாங்,** வரும் 12ஆம் தேதி நடைபெறும் தேர்தலில் தங்களின் ஜனநாயகக் கடமையை தவறாது நிறைவேற்றும்படி சிலாங்கூர் வாக்காளர்களை பக்கத்தான் ஹராப்பான் தலைவர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கேட்டுக் கொண்டார்.

அரசியல் நிலைத்தன்மை மற்றும் மக்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு இத்தேர்தலில் மக்கள் விவேகமான முடிவை எடுக்க வேண்டும் என்று டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கேட்டுக் கொண்டார்.

அன்வார் செய்வதெல்லாம் சரியானதாக ஆகி விடுமா? கிடையாது. நம்மிடம் பலவீனம் இருந்து அதனை சரி செய்ய வேண்டும்என நீங்கள் விரும்பினால் நாங்கள் சரி செய்து கொள்வோம். ஆனால் வாக்களிக்கும் போது மட்டும் தவறு புரிந்து விடாதீர்கள் என அவர் நினைவுறுத்தினார்.

இந்த தேர்தலில் அவர்களை நாம் நாக்அவுட் செய்ய வேண்டும். இனங்களைப் பற்றியும் மலாய், சீன, இந்தியர்களிடையே சச்சரவு ஏற்படுவதைப் பற்றி அவர்கள் பேசினால் மக்களைக் காக்க வேண்டிய அரசியல் வேண்டும் என நாம் கூறுவோம் என்றார் அவர்.

இங்குள்ள தஞ்சோங் சிப்பாட் காம்பிளெக்ஸ் முகிபாவில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போது பிரதமருமான அவர் இதனைத் கூறினார்.

நடப்பு அரசாங்கம் வலுவாக இருப்பதோடு நாடாளு-மன்றத்தில் அதிகப் பெரும்-பான்மை இடங்களையும் கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

பாரிசான் நேஷனலுடன் நான் ஒத்துழைப்பது அவ்வளவு எளிதான காரியமா? இல்லை. நாம் தொலைநோக்குப் பார்வை-யில் இதனை அணுகினோம். அனைத்து இனங்களையும் பாதுகாக்க வேண்டும் என நினைப்பதால் ஓரணியில் திரண்டிருக்கிறோம் என்று அவர் மேலும் சொன்னார்.

# டிஜிட்டல் பொருளாதார
## - RM24 பில்லியன் பதிவு



**கிள்ளான்,** இந்த ஆண்டின் முதல் பாதியில் டிஜிட்டல் பொருளாதார முதலீட்டில் கிட்டத்தட்ட **RM24** பில்லியனை ஈட்ட முடிந்தது காரணம் பெரும்பாலான நிறுவனங்கள் சிலாங்கூரைத் தங்கள் இருப்பிடமாகத் தேர்ந்தெடுத்தன.

மாநிலத்தின் வளர்ச்சி மற்றும் பொருளாதார சூழ்நிலையில் டெல்கோ நிறுவனத்தின் நம்பிக்கையின் காரணமாக இந்த பதிவு சாத்தியமானது என டிஜிட்டல் மற்றும் தகவல் தொடர்பு அமைச்சர் ஃபஹ்மி ஃபட்சில் தெரிவித்தார்.

கடந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் நாங்கள் **RM7.4** பில்லியனைப் பதிவு செய்தோம், அதே காலகட்டத்தில் இந்த ஆண்டு மூன்று மடங்காகப் பதிவு செய்துள்ளோம்.

மேலும், பல முதலீட்டாளர்கள் சிலாங்கூரைத் தேர்வு செய்கிறார்கள். ஏனெனில் முதலீட்டாளர்கள் டத்தோ மந்திரி புசாரியின் கீழ் நிர்வாகத்தின் வழியைப் பார்க்கிறார்கள். மக்களைக் கவனித்துக்கொள்வது மட்டுமல்லாமல் பொருளாதாரச் சூழலும் முதலீட்டாளர்களை நம்ப வைக்கும்," என்று அவர் கூறினார்.

நேற்றிரவு போர்ட் கிள்ளான் தொகுதியில் நடைபெற்ற ஜெலாஜா மடாணி நிகழ்வில் பேசிய ஃபஹ்மி, சிலாங்கூர் மின்சார வாகன நிறுவனமான டெஸ்லா எதிர்க்கட்சிகளை பதற்றமடையச் செய்யும் அளவுக்கு கவனத்தை ஈர்த்து வருகிறது என்றார்.

"அஸ்மின் (சிலாங்கூர் தேசியக் கூட்டணியின் தலைவர்) அவர்களால் பிரதமர் எலான் மஸ்க்கைச் சந்தித்ததை ஏற்றுக்-கொள்ள முடியாது.

டெஸ்லா சைபர்ஜெயாவில் தலைமையகத்தைத் திறக்க ஒப்புக்கொண்டது. செப்டம்பரில் நாங்கள் அதை அதிகார-பூர்வமாகத் தொடக்கி வைப்போம் மற்றும் பிரதமர் எலோன் மஸ்க் அவர்களுக்கு அழைப்பு விடுப்பார்," என்று அவர் கூறினார்.

# 2018 ஆம் ஆண்டு முதல் சிலாங்கூர் பொருளாதாரம் அதிகரிப்பு

**ஷா ஆலம்,** சிலாங்கூர் பொருளாதாரம் 2018 முதல் தொடர்ந்து செழித்து வளர்கிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) மிகப்பெரிய பங்களிப்பாளராக சிலாங்கூர் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துகிறது.



மாநில இருப்பு **2008** க்குப் பிறகு மிகப்பெரிய எண்ணிக்கையை பதிவு செய்துள்ளது. அதே நேரத்தில், டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரியின் நிர்வாகத்தின் போது அவரது முன்னோடியுடன் ஒப்பிடும்போது கடன் அளவும் கணிசமாகக் குறைந்துள்ளது.

சிறப்பை மேம்படுத்தும் வகையில், மாநிலத்தை சிறந்த நிலைக்குக் கொண்டுவர முதல் சிலாங்கூர் திட்டம் **(RS-1)** அறிமுகப்படுத்தப்பட்டது.

சிலாங்கூர் மக்களைப் பெருமைப்படுத்தும் முக்கியமான மாநில பொருளாதார சாதனைகள்:

மலேசியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சிலாங்கூரின் பங்களிப்பு 25.5 சதவீதமாக அதிகரித்துள்ளது.

2022 ல் மாநில கையிருப்பு **RM3.7** பில்லியனாக அதிகரித்துள்ளது.

நான்கு ஆண்டுகளில் **RM1** பில்லியன் அதிகரிப்பு.

**(2018 (முதல்) 2022ல்** மாநில வருவாய் **RM2.533** பில்லியன், இலக்கு **RM2.05** பில்லியனைத் தாண்டியது.

2022 இல் **RM9,983** இன் சராசரி வருமானம், தேசிய அளவில் **RM6,338** யை விட அதிகமாகும் 2019 முதல் 2022 வரை ஆண்டுக்கு 6.5 சதவீதம் வருமான வளர்ச்சி.

வேலையின்மை விகிதம் 2022 ல் 2.9 சதவிகிதம், தேசிய அளவில் 3.6 சதவிகிதத்தை விட குறைவு

2025 வரை ஐந்தாண்டு மேம்பாட்டுத் திட்டமான **RS-1** ஐ அமலாக்கம். ஆண்டுக்கு **RM25** பில்லியன் முதல் 35 பில்லியன் வரை முதலீட்டு இலக்கு அங்கீகரிக்கப்பட்டது

ஆண்டுக்கு 6.5 முதல் 7 சதவிகிதம் ஆண்டு ஜிடிபி வளர்ச்சி இலக்கு

3.5 முதல் 3.8 மில்லியன் தனிநபர்களின் மொத்த வேலை வாய்ப்பு

# வெள்ளத் தடுப்புத் திட்டங்கள்
## 2025க்குள் முற்றுப் பெறுவது உறுதி

**ஷா ஆலம்,** சிலாங்கூரில் வெள்ளப் பிரச்சனைக்கு முழுமையானத் தீர்வு காணப்படுவதில் மாநில அரசு உறுதியாக உள்ளது. இதன் அடிப்படையில் அது அனைத்து வெள்ளத் தடுப்புத் திட்டங்களும் நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் முடிக்கப்படுவதை உறுதி செய்து வருகிறது.

சிலாங்கூர் உள்பட நான்கு மாநிலங்களில் வெள்ளத் தடுப்புத் திட்டங்களை விரைவுபடுத்தும்படி பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் பிறப்பித்துள்ள உத்தரவை ஏற்று சிலாங்கூர் அரசு 85 வெள்ளத் தடுப்புத் திட்டங்களில் 25 திட்டங்களை பூர்த்தி செய்துள்ளது.

இவற்றில் 25 திட்டங்கள் முழுமையாகப் பூர்த்தியடை-ந்துள்ளன. எஞ்சிய திட்டங்கள் அமலாக்கம், வடிவமைப்பு, ஆலோசக நிலையிலான திட்டமிடல் அளவில் உள்ளன என்று அடிப்படை வசதிகள், பொது வசதி மற்றும் நவீன விவசாயத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஷாம் ஹஷிம் கூறினார்.

சுமார் 111 கோடி வெள்ளி மத்திய மற்றும் மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டிலான இத்திட்டங்கள் யாவும் வரும் 2025ஆம் ஆண்டிற்குள் கட்டங் கட்டமாக பூர்த்தி செய்யப்படும் என அவர் தெரிவித்தார்.

மொத்தம் 73 திட்டங்களை மேற்கொள்வதற்கு மாநில அரசு 61 கோடியே 50 லட்சம் வெள்ளியை வடிகால் மற்றும் நீர்பாசனத் துறையிடம் வழங்கியுள்ளது. மேலும் எட்டு திட்டங்களுக்கு வடிகால் அறங்காப்பு நிதியிலிருந்து 4 கோடியே 14 லட்சம் வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு நான்கு வெள்ளத் தடுப்புத் திட்டங்களை மேற்கொள்வதற்கு 45 கோடியே 52 லட்சம் வெள்ளியை வடிகால் மற்றும் நீர் பாசனத் துறையிடம் ஒப்படைத்துள்ளது. ஆறுகள், நீர் சேகரிப்பு குளங்கள், மதகுகள் உள்ளிட்ட திட்டங்களை பிரதானமாகக் கொண்டு இந்த திட்டங்கள் அமல்படுத்தப்படுகின்றன என்று இஷாம் தெரிவித்தார்.

# நேர்த்தியான ஆட்சிக்கு நமது சிலாங்கூர் வழங்கும்

## 5 ஆண்டுகள் 5 உறுதிபாடுகள்

## 1 வளமான பொருளாதாரம் மற்றும் தரமான கல்வி உயர் வருமான வேலைவாய்ப்புகளுக்கு வழி

**நவீன விவசாயத் தொழில்கள், விண்வெளி, மின்சார ரயில் மற்றும் பேருந்துகள், 5G சேவைகள், ரோபாட்டிக்ஸ்** மற்றும் **ஆட்டோமேஷன், செயற்கை நுண்ணறிவு,** புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் மின்-விளையாட்டுகளில் பொருளாதார மேம்பாட்டு முயற்சிகளை மையப்படுத்துதல்

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதன் மூலம் சிலாங்கூரில் இளைஞர்களுக்கு **100,000 அதிக ஊதியம்** வழங்குவது

தென்கிழக்கு ஆசியாவில் சிலாங்கூர் ஒரு முக்கிய முதலீட்டு இடமாக மாறும் வகையில், போர்ட் கிள்ளான், கேரி தீவில் மூன்றாவது துறைமுகத்தை நிறுவ மத்திய அரசாங்கத்துடன் ஒத்துழைப்பது

**பிகேஎன்எஸ், எம்பிஜ** மற்றும் தனியார் துறையுடன் சிலாங்கூர் மக்களுக்கு மலிவு விலையில் வசதியான வீடுகளை **சிப்பாங், சபாக் பெர்ணம் மற்றும் கிள்ளான் ஆற்று ஓரங்களில் மூன்று புதிய நகரங்களை** உருவாக்குதல்

சிலாங்கூரை ஒரு கார்பன்-நடுநிலை மாநிலமாக மாற்றுவதற்கும், ESG தரங்களுக்கு அர்ப்பணிப்பை அதிகரிப்பதற்கும் மேலும் **நிலையான முதலீட்டுப் பூங்காக்களை** உருவாக்குதல்

சிலாங்கூரை தென்கிழக்கு ஆசியாவில் மிகவும் நேர்த்தியான 5G மாநிலமாக மாற்றும் வகையில் **5G இணைப்பை** மேம்படுத்துவது

கிள்ளான்- கோலா சிலாங்கூர், தஞ்சோங் கராங் மற்றும் சபாக் பெர்ணமுக்கு ரயில் சேவைகளை இணைக்கும் **ஜஜரன் கித்தா சிலாங்கூர்** உருவாக்கம்

**கேஎல்ஐஏவில்** உள்ள ரயில் பாதையை **தஞ்சோங் சிப்பாட் மற்றும் சுங்கை பீலேக்குடன்** இணைப்பதன் மூலம் சிலாங்கூர் மேற்கு கடற்கரைப் பகுதி ஒரு ரயில் சேவை வழித்தடமாக மாறும்.

ஆப்பிள், சீமென்ஸ், ஃபெஸ்டோ மற்றும் டசால்ட் சிஸ்டம்ஸ் போன்ற உயர் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைந்து **10,000 சிலாங்கூர் இளைஞர்களுக்கு TVET பயிற்சி** அளிப்பது

200,000 ஆரம்ப மற்றும் இடைநிலைப் பள்ளி மாணவர்களை இலக்காகக் கொண்டு சிலாங்கூர் **இலவச மக்கள் கல்வித் திட்டத்தை** விரிவுபடுத்துதல்

மலாய், ஆங்கிலம், மாண்டரின், தமிழ், ஜப்பானிய மற்றும் கொரியன் போன்ற **இலவச மொழி கற்றல் வகுப்புகளை** வழங்குகிறது

**நமது சிலாங்கூர் மாணவர் உதவி திட்டத்தில்** ஒவ்வொரு பட்டபடிப்பு மாணவருக்கும் **RM1,500** தொகை வழங்குவது

**2,000** இளம் சிலாங்கூர் மக்களுக்கு மாதந்தோறும் **RM1,500 கட்டணத்துடன் தொழில்துறை பயிற்சி வாய்ப்புகளை (இன்டர்ன்ஷிப்)** வழங்குதல்

**5 மில்லியன் ரிங்கிட் ஒதுக்கீட்டில் 10,000 கித்தா சிலாங்கூர் கிரியேட்டிவ் தூதர்களை இலக்காகக் கொண்டு கித்தா சிலாங்கூர்** டிஜிட்டல் மானியத்தை உருவாக்குவதன் மூலம் இளம் தலைமுறை மற்றும் இளைஞர்களின் படைப்பு திறன்களைத் தூண்டுதல்

# 2 சமயமே கௌரவமான வாழ்வுக்கு வழிகாட்டி

முதல் முறை ஹஜ் செய்வதற்கான முஸாஸா **யாத்ரீகர்கள்** 3000 பேருக்கு பைத்துல்லாவிற்கு பயணத்தை முடிக்க, கட்டண **மானியமாக RM2,000** வழங்குவது

**தஹ்ஃபிஸ் மற்றும் லாட்ஜ் பள்ளிகள் மற்றும் நாட்டுப்புற மதப் பள்ளிகளின் மாணவர்களுக்கு அல்-கஸாலி** உதவித்தொகையை உருவாக்குதல், இதன் மூலம் அவர்கள் மத்திய கிழக்கில் கல்வியைத் தொடர முடியும்.

**இஸ்லாமிய சமய இடைநிலைப் பள்ளிகளைப் பதிவு** செய்வதற்கு வசதி செய்து, அது பாதுகாப்பானதாக மாணவர்களுக்கு உகந்ததாக மாற்றுவது.

**மதப் பள்ளிகள் மற்றும் KAFA க்கான சிறப்பு ஒதுக்கீடுகள் மற்றும் பங்களிப்புகளை உருவாக்குதல்** அதனால் உள்கட்டமைப்பின் தரத்தை மேம்படுத்த முடியும்.

**சமய குருமார்கள் மற்றும் சமய விவகார பணியாளர்களுக்கு படி-படியாக பணிபடி உயர்வு**

- இமாம் கொடுப்பனவு RM1600 ஆக உயர்த்தப்படும்
- பிலால் கொடுப்பனவு RM700 ஆக உயர்த்தப்படும்
- சியாக் கொடுப்பனவு RM500 ஆக உயர்த்தப்படும்
- நசீர் கொடுப்பனவு RM 500 ஆக உயர்த்தப்படும்

**ஹலால் சான்றிதழ் பதிவுக்காக IKS தொழில்முனைவோரை மேற்பார்வையிடவும் உதவவும்** ஒரு சிறப்பு செயலாகத்தை உருவாக்கவும்

**RM3 மில்லியன்** கூடுதல் நிதியுடன் தேவைப்படும் பெண்களுக்கு உதவ **ஷரியா சட்ட நிதியை** அதிகரிப்பது.

**பௌத்த, கிறிஸ்தவ, இந்து சீக்கிய மற்றும் தாவோயிஸ்ட்** சமூகங்களுக்கான ஒதுக்கீட்டை அதிகரிக்கவும், இதனால் ஜெப ஆலயத்தின் உள்கட்டமைப்பு மட்டத்தை மேம்படுத்த முடியும்

சிலாங்கூரில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் **கிதாப் துராத் படிப்புகளின் வகுப்புகள்** மற்றும் விரிவுரைகளை விரிவுபடுத்துதல்

## 3 திறமையான, ஆக்ககரமான அரசு சேவைகள்

தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் ஏஜென்சிகள் அரசாங்கத்துடனான விவகாரங்களை எளிதாக்குவதற்கு **அரசாங்க சேவைகளை முழுமையாக டிஜிட்டல் மயமாக்குதல்**

**பெட்டாலிங் ஜெயா, சுபாங் ஜெயா, ஷா ஆலம் மற்றும் கிள்ளான் ஆகியவற்றை உள்ளடக்கிய கிரேட்டர் கிள்ளான்** பள்ளத்தாக்கு நிர்வாகத்தை ஒரு புதிய நிலையான மற்றும் உயர் தொழில்நுட்ப நிர்வாக மாதிரியாக உருவாக்குதல்

**சேவைகளை** மேம்படுத்தவும் மேலும் விரைவாக பதிலளிக்கக்கூடியதாகவும் இருக்க ஒவ்வொரு **பிபிடியுடன் மாநில அரசு கட்டுப்பாட்டு மையத்தை** இணைத்தல்

சிலாங்கூரில் உள்ள **ஒவ்வொரு வணிகமும்** முற்றிலும் **டிஜிட்டல் முறைக்கு** மாற உதவுவது

**PBT சேவைகள் தொடர்பான முக்கியமான சிக்கல்களை 24 மணி நேரத்திற்குள் தீர்க்க ஒவ்வொரு PBT யிலும் ஒரு சிறப்பு OSC (ஒரு நிறுத்த மையம்) நிறுவுதல்**

## 4 நிலையான, வசதியான மற்றும் வாழ்வுக்கேற்ற வளர்ச்சி

200,000 **யூனிட்** "நமது சிலாங்கூர்" வீடுகள் **3** படுக்கையறைகள் மற்றும் **2** குளியலறைகளுடன் சிலாங்கூர் குடிமக்களுக்கு **RM250,000** மற்றும் அதற்கும் குறைவான விலையில் சிறந்த வசதிகள் மற்றும் வங்கி நிறுவனங்களின் நிதியுதவியுடன் வழங்குவது

திடீர் வெள்ளம் ஏற்படுவதைக் குறைப்பதற்காக இரட்டைச் செயல்பாடாக **பொதுப் பூங்காக்களின் நெகிழ்ச்சித்தன்மையை** அதிகரித்தல்

**Kita Selangor e-Sports League** இல் பணியாற்றுதல், e-ப்ளேயர்களை விளையாட்டு வீரர்களாக அங்கீகரித்து, e-sports துறையை ஒரு புதிய தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார வாய்ப்பாக மேம்படுத்துவதில் பணியாற்றுதல் மற்றும் சிலாங்கூரில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் **Kita Selangor E-Sports** மையங்களை உருவாக்குதல்

ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு நோக்கங்களுக்காக **ஒவ்வொரு DUN பகுதியிலும் கித்தா சிலாங்கூர் ரெக்ரேசி** புசாட்டை உருவாக்குங்கள்

பிபிடியில் கழிவு சேகரிப்பு அமைப்பில் **ஆட்டோமேஷன் தொழில்நுட்பத்தைப்** பயன்படுத்துதல்

**கிராமப்புறங்களில் சாலையின் தரம் மற்றும் வசதிகளை** மேம்படுத்த **100 மில்லியன்** ரிங்கிட் ஒதுக்கீடு

**ஒவ்வொரு மாநில அரசு மற்றும் உள்ளாட்சி கட்டிடங்களிலும் சோலார் பேனல்களை பொருத்துதல்** மற்றும் **எரிசக்தி செலவினங்களை மிச்சப்படுத்தவும் குறைக்கவும் குடியிருப்பு பகுதிகளில் சோலார் பேனல்களை** நிறுவுதல்

**பொது இடங்களில் மின்சார வாகனங்களுக்காக 5,000 உயர் சக்தி சார்ஜிங் நிலையங்களை** நிறுவுவதை ஒருங்கிணைக்க பசுமை தடம் செயல்படுத்துதல்

**சிலாங்கூர்** கால்பந்து துறையில் சிறந்த திறமைகளை உருவாக்க மோரா கூனிங் அகாடமிக்கு அதிகாரம் அளிப்பதன் மூலம் மலேசியாவின் முக்கிய விளையாட்டு திறமை மேம்பாட்டு மையம். 3-தொடர் இலக்குடன் கித்தா சிலாங்கூரின் அபிலாஷைகள், **மோரா குனிங் அணி 2025 ஆம் ஆண்டு மலேசிய கோப்பை, சுக்மா மற்றும் சூப்பர் லீக் மற்றும் 2027 ஆம் ஆண்டு ஆசிய கோப்பை** ஆகியவற்றில் சாம்பியன் ஆவது.

**ஆரம்ப 10 ஆயிரம் யூனிட்களுடன்** சிலாங்கூர் அரசு ஊழியர்களுக்காக எங்கள் சிலாங்கூர் அரசு ஊழியர் குடியிருப்புகளை உருவாக்குதல்

**சிலாங்கூரில் சாலை நெரிசலைக் குறைப்பது** குறிப்பாக மாநில மற்றும் பிபிடி சாலைகளில் பெடரல் ஏஜென்சிகளுடன் ஒருங்கிணைப்பு மற்றும் தென் கொரியா, சிங்கப்பூர் மற்றும் பிற நாடுகளில் நடைமுறையில் உள்ள போக்குவரத்து மேலாண்மை முறையைப் பயன்படுத்துதல்

கார்களை சார்ந்திருப்பதைக் குறைக்க சிலாங்கூர் மொபிலிட்டி மூலம் **மினிபஸ்கள் மற்றும் வேன்களின்** பயன்பாட்டை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் விரிவுபடுத்துவது.

**குடியிருப்பு பகுதிகளில் கழிவுகளை பிரிக்கும்** முறையை வழங்குதல் மற்றும் **மறுசுழற்சி முறையை** மேம்படுத்துதல்

# 5 சிலாங்கூர் மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் இரக்கமுள்ள மாநிலமாகும்

HARAPAN X

**இல்திசம் சிலாங்கூர் பென்யாயாங்கின் 46 திட்டங்களை 60 திட்டங்களாக விரிவாக்குவது** மற்றும் எவரின் தேவைகளும் விடுபடாமலிருப்பதை உறுதி செய்வது.

iltizam Selangor Penyayang

**குழந்தை பராமரிப்பாளர்களை பதிவு செய்து பயிற்சி அளிக்கவும்** மற்றும் மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் உள்ளூர் அரசாங்கங்களில் குழந்தை பராமரிப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் தனியார் துறை பணியிடங்களில் பராமரிப்பு வசதிகளை வழங்குவதற்கான ஊக்கத் தொகைகளை வழங்குதல்

குழந்தைப் பராமரிப்புச் செலவுகளைக் குறைக்க, **பணிபுரியும் பெண்களுக்கு ஆண்டுக்கு RM1,000** தொகையுடன் சிலாங்கூர் கித்தா மகளிர் ஊக்கத் தொகையை உருவாக்குவது.

**SeLANGKAH** பயன்பாட்டின் மூலம் **சிலாங்கூர் சாரிங் திட்டம் மற்றும் மனநலத் திட்டத்தை** இலவசமாக விரிவுபடுத்துவது

SELANGOR SARING

பொது இடங்களில் CCTV தொழில்நுட்பத்தைப் பயன் படுத்துவதன் மூலம் **பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பான சிலாங்கூர் உருவாக்குதல்**

அறுவடை விளைச்சலை அதிகரிக்க சிறந்த **தரமான விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் நெல் விவசாயிகளுக்கு எங்கள் சிலாங்கூர் விவசாய ஊக்கத் தொகை RM1000** வழங்குதல்

பொது வசதிகளின் தரம் மற்றும் வசதிகளை மேம்படுத்த **ஒவ்வொரு மாவட்டத்திலும் 1 குறைந்த விலை அடுக்குமாடி குடியிருப்பின் நிர்வாகம்** எடுத்துக் கொள்ளப்படும்

**முதல் முறை வீட்டு உரிமையாளர்களுக்கு** பார்சல் வரி மற்றும் நீர் பயன்பாட்டை வணிக கட்டணத்தில் இருந்து **குடியிருப்பு கட்டணமாக மாற்றும் விருப்பத்தை** வழங்குகிறது.

ஒவ்வொரு மாவட்ட மற்றும் நகராட்சியிலும் **இலவச சிலாங்கூர் பென்ஜாயாங் ஆம்புலன்ஸ் சேவையை** ஏற்படுத்துவது.

IPT மற்றும் IPTA இல் சிலாங்கூர் மாணவர்களுக்கு **RM200 தொகையான சிலாங்கூர் கித்தா புத்தக வவுச்சர்கள்**

**ரோடா டாருள் எஹ்சான் (RIDE) திட்டத்தை இ-ஹெய்லிங் ஓட்டுநர்களுக்கு விரிவுபடுத்துதல்.**

RIDE

அனைவருக்கும் இறப்பு அறக்கட்டளை RM 1000 ஆக அதிகரித்தல்

MALAYSIA MADANI

#KitaSelangor

# 2018 - 2023

#KitaSelangor

# வளமான மற்றும் புகழ்பெற்ற ஆண்டுகள் சிலாங்கூரில்

# பக்காத்தான் ஹராப்பான் நிர்வாகம்



## பொருளாதாரம் & உள்கட்டமைப்பு

- மலேசியாவில் சிலாங்கூர் பொருளாதாரம் மிகவும் முன்னேறியுள்ளது, 2022இல் மலேசியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் **25.5%** பங்களிக்கிறது
- 2022 ஆம் ஆண்டின் சிலாங்கூர் மாநில நிதி கையிருப்பு **RM3.7** பில்லியனாகவும், இது திறமையான மற்றும் விவேகமான நிதி நிர்வாகத்தின் வரலாற்றில் மிக உயர்ந்த சான்றாகும்
- சிலாங்கூரின் பொருளாதாரம் 2021இல் 5.3% (மலேசியா: 3.3%) மற்றும் 2022இல் 11.9% (மலேசியா: 8.7%)
- சிலாங்கூர் 5 ஆண்டுகளில் **89,568** வேலை வாய்ப்புகளை உற்பத்தித் துறையில் உருவாக்கியது.
- முதலீடு: சிலாங்கூரில் 5 ஆண்டுகளில் 1,392 உற்பத்தித் திட்டங்கள் அங்கீகரிக்கப்படடு, **74** பில்லியன் ரிங்கிட் முதலீடு செய்யப்பட்டுள்ளது, இதுவே நாட்டில் மிக உயர்ந்தது
- 2020 முதல் தொடர்ந்து 3 ஆண்டுகளாக வருவாய் வசூல் இலக்கை தாண்டியுள்ளது
- முதல் சிலாங்கூர் திட்டம் RM200 பில்லியன் வளர்ச்சித் திட்டங்கள் மூலம **20,000** அதிக ஊதியம் தரும் வேலைகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது
- சிலாங்கூரில் பேரிடர்களைச் சமாளிக்க **RM3** பில்லியன் வெள்ளத் தணிப்பு திட்டம்
- சிலாங்கூர் முழுவதும் சாலை மறுசீரமைப்புக்காக **RM100** மில்லியன் செலவிடப்பட்டது
- ஒரு விரிவான மற்றும் இலவசப் பொது போக்குவரத்து அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது
- பெனுக்காரான் பைப் ஆயர் என்ற **719** மில்லியன் செலவில் 615 கிலோ மீட்டர் தூர நீர் குழாய் மாற்று திட்டம்
- சுங்கை ராசாவ் நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கட்டுமானம் **RM3.4** பில்லியன் ஆகும்

## நலன்

- 2018 முதல் 2023 வரை, சிலாங்கூர் மக்களுக்கான நலத் திட்டங்களுக்காக **RM2.37 பில்லியன்** செலவிடப்பட்டது
- கோவிட்-19 தொற்றுநோய்களின் போது சிலாங்கூர் மக்களுக்கு உதவ **RM1.1 பில்லியன்** செலவிடப்பட்டது
- சிலாங்கூரில் **4 பில்லியன்** குடிமக்கள் இலவசத் தண்ணீரைப் பெறுகின்றனர்
- **6 மில்லியன்** சிலாங்கூர் குடியிருப்பாளர்கள் மாநிலத்தில் முழுமையாக ஏற்கப்படும் இலவச ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை அனுபவிப்பர்
- B40 சிலாங்கூரில் **30 ஆயிரம்** B40 குடும்பங்கள் பிங்காஸ் உதவியை ஒவ்வொரு ஆண்டும் **RM3,600** பெறுகின்றனர்
- சிலாங்கூரில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் **RM500** பெறுகின்றனர்
- ஒவ்வொரு மூத்த குடிமகனுக்கும் மூத்த குடியாளர் உதவியாக ஆண்டுக்கு **RM150** தொகை வழங்கப்படுகிறது
- **400,000** சிலாங்கூர் குடிமக்கள் ஆண்டுதோறும் **RM200**யை பெருநாள் உதவியாகப் பெறுகின்றனர்
- அரசியல் சார்பு இல்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து மக்கள் பிரதிநிதிகளுக்கும் நியாயமான மற்றும் சமமான ஒதுக்கீடு பெறுகின்றனர்
- இல்திசம் சிலாங்கூர் சிஹாத் (முன்னர் பெடுலி சிஹாத்) (Iltizam Selangor Sihat) (dahulu Peduli Sihat), **1.1 மில்லியன்** சிலாங்கூர் குடிமக்கள் இலவச அடிப்படை சுகாதாரப் பாதுகாப்பு மூலம் பயனடைகிறார்கள்
- **12 ஆயிரம்** சிலாங்கூர் குடிமக்கள் ஒரு நபருக்கு **RM50 ஆயிரம்** வரை இலவச இதய சிகிச்சை திட்டத்தின் பலனைப் பெறுகின்றனர்
- தேவைப்படும் **3,000** சிலாங்கூர் குழந்தைகள் ஊட்டச்சத்து உணவு திட்டத்தில் (சிலாங்கூர் ஆரோக்கியமான குழந்தைகள்) உதவி பெறுகின்றனர்
- **11 ஆயிரம்** சிலாங்கூர் குடிமக்கள் இலவச கண் பரிசோதனை செய்து கொள்கின்றனர்

## கல்வி

- ஆண்டுதோறும் **63 ஆயிரம்** சிலாங்கூர் குழந்தைகள் பிரத்தியோக இலவசக் கல்வி (tuisyen) உதவியை பெறுகின்றனர்
- 2008 முதல் சிலாங்கூர் முழுவதும் உள்ள பள்ளிகளுக்கு **RM260 மில்லியன்** நிதி உதவி வழங்கப்படுகிறது
- சிலாங்கூரில் இருந்து பல்கலைக்கழகத்திற்குள் நுழையும் ஒவ்வொரு மாணவருக்கும் **RM1,000** வழங்கப்படுகிறது
- பல்கலைக்கழகத்தில் நுழையக் கட்டண உதவி தேவைப்படும் சிலாங்கூர் மாணவர்களுக்கு உதவ **RM20 மில்லியன்** வழங்கப்படுகிறது
- **40 ஆயிரம்** சிலாங்கூர் குழந்தைகள் ஒவ்வொரு மாதமும் KAFA கட்டண மானியங்களைப் பெறுகின்றனர்
- **20 ஆயிரம்** சிலாங்கூர் குழந்தைகள் பல்கலைக்கழகத்தில் படிப்பை தொடர உதவித்தொகை பெற்றனர்
- TVET (தொழில்நுட்ப மற்றும் தொழில்சார்) துறைக்கு **RM100 மில்லையன்** வழங்கப்படுகிறது
- யாயாசன் சிலாங்கூர் வழங்கும் உதவித்தொகை மற்றும் கல்வி உதவி தொகை **RM10 மில்லியன்**
- **21 ஆயிரம்** குழந்தைகள் மழலையர் பள்ளிக் கட்டண மானியத்தைப் பெறுகிறார்கள் ("Tunas" திட்டம்)

## வாழ்க்கை செலவு

- **4.4 மில்லியன்** சிலாங்கூர் குடியிருப்பாளர்கள் மலிவான மளிகை பொருட்களை அனுபவிக்க Jelajah Ehsan Rakyat (JER) மூலம் **RM23 மில்லியன்** செலவிடப்பட்டது
- 2015 முதல், சிலாங்கூர் ஸ்மார்ட் பேருந்தில் **60 மில்லியன்** மக்கள் இலவசமாக பயணம் செய்துள்ளனர்
- குறைந்த விலை வீடுகளுக்குச் சொத்துவரி மற்றும் அங்காடி கடை உரிமக் கட்டணத்தை சிலாங்கூர் அரசே முழுமையாக ஏற்று கொள்கிறது
- விவசாயிகளுக்கு நெல் மற்றும் பூச்சிக்கொல்லி மானிய உதவியாக **RM5 மில்லியன்** வழங்கப்படுகிறது.
- மழைக்காலத்தில் மீனவர்களுக்கு இழப்பை ஈடுகட்ட உதவி **ரிம 2.5 மில்லியன்** வழங்கப்படுகிறது
- 2018 முதல் சிலாங்கூரில் உள்ள **85 ஆயிரம்** தொழில் முனைவோருக்கு **RM767 மில்லியன்** கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது

## பெண்கள் மற்றும் இளைஞர்கள்

- Grab / Foodpanda மற்றும் e-hailing இளைஞர்களுக்கு உரிய மானியம், **RM500** உதவி மற்றும் EPF பங்களிப்பு பலனைப் பெறுகின்றனர்
- **20 ஆயிரம்** இளைஞர்கள் இலவச சிலாங்கூர் இன்டர்நெட் டேட்டாவின் பலனைப் பெறுகின்றனர்
- Selangor Mega Job Fair இளைஞர்களுக்கான பரந்த அளவிலான வேலை வாய்ப்புகளை கொண்டுள்ளது, மொத்தம் **10 ஆயிரம்** வேலை வாய்ப்புகள் உள்ளன
- இலவச மேமோகிராம் பரிசோதனை மூலம் **10 ஆயிரம்** பெண்களுக்கு வழங்கப்பட்டது
- பெண்களுக்கு சமையலறை பொருட்களை வாங்குவதற்கு மாதம் **200 ரிங்கிட்** வழங்கப்பட்டது (Bingkas திட்டம்)
- குறிப்பாக சிலாங்கூரில் பெண்களுக்கு இலவச மருத்துவ பரிசோதனை வழங்கப்படுகிறது
- சிலாங்கூர் சிறப்பு குழந்தைகளுக்கான (ANiS) பல்வேறு திட்டங்களுக்காக **RM15 மில்லியன்** செலவிடப்பட்டது
- குறிப்பாக சிலாங்கூர் பெண்களை பாதுகாக்க சட்ட உதவி நிதிக்கு **RM4 மில்லியன்** செலவிடப்பட்டது

## வீட்டுவசதி

- சிலாங்கூர் முழுவதும் சேதமடைந்த அடுக்குமாடி குடியிருப்புகள், குறைந்த விலை வீடுகளை சரி செய்ய **RM50 மில்லியன்** (CERIA திட்டம்)
- ஸ்மார்ட் ரேன்ட் திட்டத்தின் வழி வீட்டுக்கு முன் கட்டணம் செலுத்த முடியாத, முதல் முறையாக வீடு வாங்குபவர்களுக்கு **RM60 மில்லியன்** வாடகை வீட்டுக்கு முன் பணமாக மாற்ற வழங்கப்பட்டுள்ளது
- சிலாங்கூர் மக்களுக்கு **60 ஆயிரம்** யூனிட் சிலாங்கூர் கூ வீடுகள் கட்டப்பட்டுள்ளது
- **40 ஆயிரம்** குறைந்த விலை அபார்ட்மெண்ட்களுக்கு காப்பீடு பலன்களைப் பெறுகிறது

Kita Selangor : Terbukti, Teruji & Terunggul. Undi Perpaduan Demi Kestabilan & Kemakmuran Selangor



பிரதமரின் மனைவி டத்தோஸ்ரீ டாக்டர் வான் அசிசா வான் இஸ்மாயில் மற்றும் பக்காத்தான் ஹரப்பான் (ஹரப்பான்) ஈஜோக் தொகுதி வேட்பாளர் ஹாமிடி அப்துல் மானன் ஆகியோர் கோலா சிலாங்கூர் நகராண்மை கழக சந்தையில் பொதுமக்களுடன் நட்புறவாக இருந்தனர்.



ஷா ஆலமின் சுங்கை பூலோவில் உள்ள தாமான் சௌஜானா உத்தாமாவில், பக்காத்தான் ஹராப்பான் (ஹரப்பான்) பாயா ஜெராஸ் தொகுதி வேட்பாளர் முகமட் கைருடின் ஒத்மான், இளைஞர்களை சந்தித்தார்.



டெங்கில் 4 = டெங்கில் வேட்பாளர் நூரஸ்லி சைட் (இரண்டாவது, வலது) சிப்பாங்கில் உள்ள ஜே.கே.கே.கே.ஸ்ரீ டெங்கில் கம்போங் பாரு சீனாவில் தன் பிரச்சாரத்தை தீவிரப்படுத்தி உள்ளார்.



சிலாங்கூர் ஸ்ரீ சித்தியா வேட்பாளர் டாக்டர் பாஹ்மி நா மக்கள் சந்திப்பு கூட்டத்தில் உரை நிகழ்த்தும் முன் கட்சி தொண்டர்கள் மற்றும் பொது மக்களுடன்



சேமநிதி சந்தா (EPF) கோலா சிலாங்கூரில் வாடிக்கையாளர் சந்திப்பு தினத்தில் கலந்து கொண்ட புக்கிட் மெலாவத்தி வேட்பாளர் தீபன் சுப்ரமணியத்திற்கு அதன் கிளைத் தலைவர் ஷாருல் நிஜாம் மாட் சலே விளக்கம் அளித்தார்.



குடியிருப்பாளர்களைச் சந்தித்து அவர்களின் புகார்களைக் கேட்ட பின், தாமான் சூரியா இண்டாவில் உள்ள சீன சமூகத்துடன் பெர்மாத்தாங் வேட்பாளர் முகமட் யாஹ்யா மாட் சாஹ்ரி

# கோத்தா கெமுனிங் ஹராப்பான் வேட்பாளர் பிரகாஷுக்கு ஸ்ரீ மூடா பொது அமைப்புகள் ஆதரவு



**ஷா ஆலம்,** பக்கத்தான் ஹராப்பான் கூட்டணியின் சார்பில் போட்டியிட இருக்கும் பிரகாஷ் சாம்புநாதனுக்கு ஸ்ரீ மூடா வட்டார அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் முழு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ஜசெக சார்பில் களம் காணும் இந்த புதுமுக வேட்பாளரின் வெற்றியை உறுதி செய்வதில் தாங்கள் முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாக அவர்கள் வாக்குறுதியளித்தனர்.

நேற்று இங்குள்ள தாமான் ஸ்ரீ மூடா அஸாலியா மண்டபத்தில் நடைபெற்ற அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் சந்திப்பு நிகழ்வில் தங்கள் ஆதரவை அவர்கள் புலப்படுத்தினர்.

கோத்தா கெமுனிங் தொகுதியின் நடப்பு சட்டமன்ற உறுப்பினரும் மாநில ஆட்சிக்குழு உறுப்பினருமான வீ.கணபதிராவ், ஷா ஆலம் மாநகர் மன்ற உறுப்பினரும் பந்திங் தொகுதிக்கான பக்கத்தான் ஹராப்பான் வேட்பாளருமான வீ.பாப்பாராய்டு, ஷா ஆலம் மாநகர் மன்ற உறுப்பினர் ராமு நடராஜன் மற்றும் பலர் தங்கள் ஆதரவை தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் கலந்துக் கொண்ட ஸ்ரீ மூடா ருக்குன் தெத்தாங்கா பிரிவுகள், ஸ்ரீமூடா சிறுவணிகர்கள் சங்கம், குடியிருப்பாளர் சங்கங்கள், ஸ்ரீ மூடா ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம், புக்கிட் கெமுனிங் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம், என்.ஜி.ஓ. பொது அமைப்புகள், பிகேஆர். ஜசெக, அமானா கட்சிகளின் தலைவர்கள் பிரகாஷ் வேட்பாளராக நியமிக்கப்பட்டதை தாங்கள் வரவேற்பதோடு அவருக்கு இத்தேர்தலில் முழு ஆதரவையும் வழங்குவதாக ஒருமித்தக் குரலில் கூறினர்.

இத்தொகுதியில் போட்டியிடும் தமக்கு முழு ஆதரவை வழங்கிய அனைத்து அமைப்புகளின் பொறுப்பாளர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்ட பிரகாஷ், வாக்கு சேகரிப்பதற்கு தங்கள் பகுதிக்கு வரும் படி அவர்கள் விடுத்த அழைப்பையும் ஏற்றுக் கொள்வதாகச் சொன்னார்.

### சட்டமன்ற உறுப்பினர் கணபதிராவ் ஆதரவு

கோத்தா கெமுனிங் தொகுதியில் பக்கத்தான் வெற்றிக்கு ஒன்றிணைந்து பாடுபடுவோம் என கணபதிராவ் வீரமன் வேண்டுகோள் விடுத்தார்.

எதிர்வரும் மாநிலத் தேர்தலில் தொகுதியை தக்க வைத்துக் கொள்வதற்கு அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும் என்று அத்தொகுதியின் நடப்பு உறுப்பினரான வீ.கணபதிராவ் கேட்டுக் கொண்டார்.

மாநிலத்தில் பக்கத்தான் ஹராப்பான் தலைமையிலான அரசாங்கம் நிலைக்கவும் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிமுக்கு ஆதரவளிக்கவும் இந்த தொகுதியின் வேட்பாளரை ஒன்றிணைந்து வெற்றிபெற செய்ய வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

# வேட்பாளரை அறிவோம்

## தீபன் சுப்பிரமணியம்



அடுத்த மாதம் 12ஆம் தேதி நடைபெறவிருக்கும் மாநிலத் தேர்தலில் கெஅடிலான் கட்சியின் சார்பில் சிலாங்கூர் மாநிலத்தில் போட்டியிடவுள்ள இரு வேட்பாளர்களில் ஒருவராக தீபன் சுப்பிரமணியம் விளங்குகிறார்.

புக்கிட் மெலாவத்தி தொகுதியில் பக்கத்தான் ஹராப்பான் - பாரிசான் நேஷனல் கூட்டணியைப் பிரதிநிதித்துப் போட்டியிடவிருக்கும் 35 வயதான தீபன், சிலாங்கூர் மாநிலத்தின் பந்திங் நகரை தனது பூர்வீகமாகக் கொண்டவர். அவர் தனது எஸ்.டி.பி.எம். கல்வியை பந்திங், தெலுக் டத்தோ மேல் இடைநிலைப்பள்ளியில் முடித்து சட்டத் துறையில் இளங்கலைப் பட்டத்தை இங்கிலாந்தின் நோர்தம்பரியா பல்கலைக்கழகத்தில் பெற்றார்.

வழக்கறிஞர் நிறுவனம் ஒன்றில் சட்ட நிர்வாகியாகவும் ஸ்மார்ட் மூவ் ரிசோர்சஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் பொருளாதார அமைச்சர் ரபிஸி ரம்லியின் சிறப்பு பணிகளுக்கான அதிகாரியாகவும் இவர் பணி புரிந்து வருகிறார்.

கடந்த 2016 முதல் 2018 வரை சிலாங்கூர் மாநில கெஅடிலான் இளைஞர் பிரிவு துணைத் தலைவராகவும் 2018 முதல் 2022 வரை கெஅடிலான் கட்சியின் தேசிய இளைஞர் பிரிவின் உதவித் தலைவராகவும் தீபன் சேவையாற்றியுள்ளார்.

தற்போது அவர் கோல சிலாங்கூர் கெஅடிலான் தொகுதியின் தலைவர் பொறுப்பை வகித்து வரும் அதே வேளையில் கட்சியின் மத்திய ஏற்பாட்டுகுழு துணைத் தலைமைச் செயலாளர், கட்சியின் திட்டமிடல் மற்றும் கொள்கை ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளையும் ஏற்று தீபன் திறம்பட செயலாற்றி வருகிறார்.

குறைந்த வருமானம் பெறும் தரப்பைச் சேர்ந்த இந்திய தொழில் முனைவோருக்கு வர்த்தக உபகரணங்கள் மற்றும் கைத்தொழில் பயிற்சிகளை வழங்கி அவர்களை பொருளாதார ரீதியில் உயர்த்துவதை நோக்கமாக கொண்ட "சித்தம்" எனப்படும் சிலாங்கூர் இந்திய தொழில் ஆர்வலர் மையத்தை தோற்றுவித்த பெருமை தீபன் சுப்பிரமணியத்தைச் சாரும்.

# பந்திங் மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவேன்



**பந்திங்,** ஷா ஆலம் மாநகர் மன்ற உறுப்பினராக நீண்ட காலம் பணியாற்றியதன் மூலம் கிடைத்த அனுபவத்தைக் கொண்டு பந்திங் தொகுதி மக்களுக்கு நிறைவான சேவையை வழங்கப் பாடுபடுவேன் என்று அத்தொகுதிக்கான பக்கத்தான் ஹராப்பான் வேட்பாளரான வீ.பாப்பாராய்டு கூறினார்.

கடந்த 2008ஆம் ஆண்டு முதல் மாநகர் மன்ற உறுப்பினராக பணியாற்றியதன் மூலம் கிடைத்த பரந்த அனுபவம் சமூக நலன் மற்றும் அடிப்படை வசதிகள் துறையில் சிறப்பான சேவையை வழங்குவதற்கு தமக்கு வாய்ப்பினை வழங்கும் என அவர் குறிப்பிட்டார்.

சிலாங்கூரில் நீண்ட காலம் அதாவது 13 ஆண்டுகள் மாநகர் மன்ற உறுப்பினராகப் பணி-யாற்றியுள்ளேன். இந்த அனுபவம் சாலை சீரமைப்பு, தொகுதியில் சுத்தத்தைப் பராமரிப்பது, சமூக நலன் உள்ளிட்ட விஷயங்களில் தொகுதி மக்களுக்கு சிறப்பான சேவையை வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எனக்கு பெரிதும் துணை புரியும் என்று அவர் தெரிவித்தார்.

இம்மாதம் 12ஆம் தேதி நடைபெறவிருக்கும் மாநிலத் தேர்தலில் பந்திங் தொகுதியில் ஜசெக சார்பில் பாப்பாராய்டு களமிறங்கியுள்ளார். இத்தொகுதி பக்கத்தான் ஹராப்பான் வசம் தொடர்ந்து இருப்பதை உறுதி செய்ய அவர் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

சந்தைகள், வணிக மையங்கள், உணவகங்கள் போன்ற மக்கள் அதிகம் கூடும் இடங்களுக்கு நேரில் சென்று பொது மக்களைச் சந்தித்து அவர்களின் ஆதரவைத் திரட்டும் அணுமுகுறையை அவர் கடைபிடிக்கிறார்.

பந்திங் தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லாவ் வேங் சான் மற்றும் ஹராப்பான். பாரிசான் நேஷனல் கூட்டணிக் கட்சிகளின் பொறுப்பாளர்களும் பாப்பாராய்டுவுக்கு ஆதரவாக தீவிரப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

# 11 லட்சம் வெள்ளி செலவில் 29 மேம்பாட்டுத் திட்டங்கள் அமல்



**ஷா ஆலம்,** சுங்கை காண்டீஸ் சட்டமன்றத் தொகுதியில் சிலாங்கூர் பென்யாயாங் (பி.எஸ்.பி.) திட்டத்தின் கீழ் 11 லட்சத்து 95 ஆயிரம் வெள்ளி மதிப்புள்ள மேம்பாட்டுத் திட்டங்கள் அமல்படுத்தப்பட்டுள்ளன.

இந்த பி.எஸ்.பி. முன்னெடுப்பின் கீழ் மொத்தம் 29 மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தொகுதியின் நடப்பு உறுப்பினரான முகமது ஜவாவி அகமது முக்னி கூறினார்.

இந்த நிதி ஒதுக்கீட்டில் 695,000 வெள்ளி கடந்தாண்டிலும் மேலும் 500,000 வெள்ளி இவ்வாண்டு ஜூலை வரையிலும் செலவிடப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இந்த நிதியைக் கொண்டு பாலர் பள்ளிகள், பள்ளிகள், வடிகால்கள் மற்றும் சாலைகள் சீரமைக்கப்பட்டதோடு சோலார் தெரு விளக்குகளும் பொருத்தப்பட்டதாக அவர் சொன்னார்.

நகரமய விரிவாக்கத்தின் எதிரொலியாக ஏற்படும் கனரக வாகனங்களின் போக்குவரத்து அதிகரிப்பு சாலைகள் பழுதடையக் காரணமாக அமைவதால் புறநகர் பகுதிகளின் மேம்பாட்டிலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அதே சமயம், வடிகால்களிலும் புதர்கள் மண்டி விடுவதால் நீரோட்டம் தடைபடுகிறது. ஆகவே, இப்பிரச்சனைகளைக் களைவதற்கான வழிவகைகளை நாம் ஆராய வேண்டியுள்ளது என அவர் தெரிவித்தார்.

மாநிலத்தின் அனைத்து 56 தொகுதிகளிலும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக மாநில அரசு கடந்தாண்டு செப்டம்பர் மாதம் இந்த பி.எஸ்.பி. திட்டத்தை அமல்படுத்தியது.

மக்களுக்கு பயன்தரக்கூடிய சிறு திட்டங்களை அமல்படுத்துவதன் மூலம் வட்டார பொருளாதாரத்திற்கு புத்தயிரூட்டும் நோக்கில் 2 கோடியே 80 லட்சம் வெள்ளி ஒதுக்கீடு செய்யப்படுவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறியிருந்தார்.

# போக்குவரத்து நெரிசல் பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டும்



**கோம்பாக்,** பக்காத்தான் ஹராப்பான் வேட்பாளர் அன்ஃபால் ஷாரி சிலாங்கூர் மாநிலத் தேர்தலில் தாமான் டெம்ப்ளர் தொகுதியில் வெற்றி பெற்றால், அப்பகுதியின் போக்குவரத்து நெரிசல் பிரச்சனைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

அத்தொகுதியில் செலாயாங் பண்டாங்கில் உள்ள கால்டெக்ஸ் பெட்ரோல் நிலையத்திலிருந்து தொடங்கி, ரவாங் பைபாஸ் வரை, காலை 6.30 மணி முதல் 9.30 மணி வரையிலும், வேலை நாட்களில் மாலை 3.30 மணி முதல் இரவு 7 மணி வரையிலும் நெரிசல் எட்டு கிலோமீட்டர் வரை இருக்கும் என்று அவர் கூறினார். “பல தாமான் டெம்ப்ளர் குடியிருப்பாளர்கள் கோலாலம்பூரில் வேலை செய்கிறார்கள், மேலும் இந்த பிரச்சனை அவர்களின் அன்றாட வாழ்க்கையை பாதிக்கிறது.

“இதன் விளைவாக, அவர்கள் அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும் மற்றும் வேலைக்குச் செல்லும் போது போக்குவரத்து நெரிசலைக் கையாளும் அழுத்தத்தை எதிர்கொள்ள வேண்டும்,” என்று அவர் நேற்று ராவாங்கில் உள்ள கம்போங் மெலாயு பத்து 16 இல் நடைபெற்ற நடைபயண நிகழ்ச்சியின் போது கூறினார்.

குடியிருப்பாளர்களுக்கு தடையாக இருக்கும் நீண்ட கால போக்குவரத்து சிக்கல்களைத் தீர்க்க செலாயாங் எம்.பி வில்லியம் லியோங் மற்றும் தாமான் டெம்ப்ளரின் முந்தைய மாநிலச் சட்டமன்ற உறுப்பினர் முகமட் சானி ஹம்சான் ஆகியோர் மேற்கொண்ட முயற்சிகளை நானும் தொடருவேன் என்று அன்ஃபால் மேலும் கூறினார். அவர் மலேசிய ஐக்கிய ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளரான ஐடா ரஹ்மான் மற்றும் பெரிகடன் நேஷனலின் வேட்பாளரான் சைடி அப்துல் தாலிப் ஆகியோரை எதிர்த்துப் போட்டியிடுகிறார்.

# வேட்பாளரை அறிவோம் - டாக்டர் குணராஜ் ஜோர்ஜ்

**காஜாங்,** சிலாங்கூர் மாநிலத்தில் அதிக இந்திய வாக்காளர்களைக் கொண்ட தொகுதிகளில் ஒன்றாக விளங்கும் செந்தோசா தொகுதியில் இரண்டாம் முறையாக களம் காணும் வேட்பாளராக திகழ்கிறார் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ்.

பேராக் மாநிலத்தின் ஈப்போவில் பிறந்தவரான 59 வயது குணராஜ், செந்தூல் லாசாலே பள்ளியில் கடந்த 1981ஆம் ஆண்டில் இடைநிலைப்பள்ளியை முடித்தார். மலேசிய காப்புறுதிக் கழகத்தின் சான்றிதழ் பெற்ற ஆயுள் காப்புறுதி முகவராகவும் நம்லிஃபா எனப்படும் மலேசியக் காப்புறுத் மற்றும் நிதி ஆலோசகர்கள் சங்கத்தின் உறுப்பினராகவும் கடந்த 2013ஆம் ஆண்டு இடம் பெற்றார்.

இது தவிர கடந்த 2015ஆம் ஆண்டு ஆசியா இ பல்கலைக்கழகத்தில் (ஏ.இ.யு.) வர்த்தக நிர்வாகம் (எம்.பி.ஏ.), நிர்வாக மேலாண்மைத் துறையில் பட்டம் பெற்றோடு 2018ஆம் ஆண்டில் ஸ்கேண்டிநேவியா அனைத்துலக வர்த்தகப் பள்ளியில் வர்த்தக மேலாண்மை துறையில் (டி.பி.ஏ,) முனைவர் பட்டமும் பெற்றார். தற்போது இவர் எம்.சி.ஐ.எஸ். காப்புறுதி கூட்டுறவுக் கழகத்தின் தலைவராகவும் பொறுப்பு வகித்து வருகிறார்.

கட்சி அரசியலைப் பொறுத்த வரை கோத்தா ராஜா தொகுதியின் கெஅடிலான் தலைவர், சிலாங்கூர் மாநில கெஅடிலான் தலைமைத்துவ மன்ற உறுப்பினர் கெஅடிலான் கட்சியின் தேசியத் தலைமைத்துவ மன்ற உறுப்பினர் ஆகிய பதவிகளையும் ஏற்று அவர் திறம்பட சேவையாற்றி வருகிறார். கடந்த 2009 முதல் 2016 வரை செலாயாங் நகராண்மைக் கழக உறுப்பினராக பணியாற்றிய குணராஜ், கடந்த 2018ஆம் ஆண்டில் செந்தோசா சட்டமன்றத் தொகுதியில் பக்கத்தான் ஹராப்பான் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றியும் பெற்றார்.



இது தவிர இந்திய சமூகத்திற்கான மந்திரி புசாரின் சிறப்பு அதிகாரி-யாகவும் கடந்த 2021ஆம் ஆண்டு முதல் இவர் பொறுப்பு வகித்து வருகிறார்.



## பல்வேறு வசதிகளுடன் ஈஜோக்கை உருவாக்குதல்



**கோலா சிலாங்கூர்,** ஹராப்பான் வேட்பாளர்கள் பல்வேறு வசதிகளுடன் கூடிய மலிவு மற்றும் குடும்பத்திற்கு ஏற்ற குடியிருப்பு இடமாக ஈஜோக்கை உருவாக்க உறுதி பூண்டுள்ளார்.

ஷா ஆலம், அம்பாங் மற்றும் பெட்டாலிங் ஜெயாவில் உள்ள மக்கள் தொகை அடர்த்தி, குறிப்பாக புதிதாக திருமணமான தம்பதிகளுக்கு கவனம் செலுத்தும் பகுதியாக ஈஜோக்கின் திறனை அதிகரிப்பதாக அமிடி அப்துல் மனான் கூறினார்.

ஈஜோக் முன்னேறும் திறனைக் கொண்டுள்ளது.

இங்குள்ள வளர்ச்சி குடும்பத்திற்கு ஏற்றதாக இருக்க வேண்டும், ஏனென்றால் நாம் பார்க்கும்போது, அம்பாங், பெட்டாலிங் ஜெயா மற்றும் ஷா ஆலம் ஆகிய இடங்களிலிருந்து பல குடியிருப்பாளர்கள் ஈஜோக்கிற்குக் குடிபெயர்கிறார்கள், ஏனெனில் அவர்கள் வசதியான இடத்தை விரும்புகிறார்கள்.

"எனவே, சமூகத்திலும் இங்கு வாழும் சூழலிலும் அமைதி பராமரிக்கப்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன். "எனினும், அதே நேரத்தில், இந்த பகுதியில் ஒரே நேரத்தில் இயங்க வேண்டிய வளர்ச்சி மற்றும் பொருளாதாரம் பற்றிய பிரச்சனையை நாம் மறந்துவிட முடியாது," என்று அவர் கூறினார்.

விரிவான இணைய கவரேஜ் என்பதும் அவர் கவனம் செலுத்தும் விஷயங்களில் ஒன்றாகும், இதனால் ஈஜோக்கை டிஜிட்டல் பொருளாதாரத்தின் மையமாக மாற்ற முடியும்.

"ஈஜோக் அதன் மூலோபாய நிலை காரணமாக டிஜிட்டல் பொருளாதார மையமாக மாறும் திறனைக் கொண்டுள்ளது.

"ஈஜோக் மக்கள் உள்ளூர் சமூகத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்த இந்த வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டும்," என்று அவர் கூறினார்.அவர் சொன்னார்.

## வேட்பாளரை அறிவோம்

### முகமட் யாஹ்யா மட்ஷாரி



**கோல சிலாங்கூர்,** பெர்மாத்தாங் தொகுதியின் பாக்காத்தான் ஹரப்பான் எண் : 09 பெர்மாத்தாங் சட்டமன்ற தொகுதியின் வேட்பாளர் முகமட் யாஹ்யா மட்ஷாரி அவர்களின் ஏற்பாட்டில் சிவப்பு மஞ்சள் ஆரூஸ் சொற்பொழிவு நேற்று இரவு நடைபெற்றது.

இத்தொகுதியில் திரளான ஹராப்பான் ஆதரவாளர்கள் முன்னிலையில் மிக சிறப்பாக நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஆதரவு வர்ண ஆடை அணிந்து பலர் ஆரவாரத்துடன் இச் சொற்பொழிவில் கலந்து கொள்வது, தமக்கு பெரும் மகிழ்ச்சியாக உள்ளதாக அத்தொகுதியின் வேட்பாளர் முகமட் யாஹ்யா மட்ஷாரி தனது வரவேற்பு உரையில் மகிழ்ச்சி பொங்க கூறினார்.

அது மட்டும் இன்றி தான் ஒரு விவசாயி மகன் என கூறிய அவர். நான் இங்கு உள்ளவன், உங்களுடன் எப்போதும் இங்கு இருப்பவன். உங்களுக்கு ஏதாவது ஒரு பிரச்சனை என்றால் உடனே நான் ஓடி வருவேன். .அதனால் உங்களோடு ஓர் உறவாக இருக்கும் எனக்கு நீங்கள் ஆதரவு கொடுங்கள், எனக்கு வாக்களித்து ஒரு விவசாயின் பிரதிநிதியாக என்னை சட்டமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்..

தொடர்ந்து,சிலாங்கூர் காபந்து அரசாங்க மந்திரி புசார் டத்தோ அமிருடன் பின் ஷாரி தனது உரையில் பக்காத்தான் ஹரப்பான் வேட்பாளர் யாஹ்யா சாரிக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்தார்.

## சுபாங் தோட்ட மக்களின் வீட்டு உடமைக்கு தீர்வு



**சுபாங்,** கடந்த 7 ஆண்டுகளாக முறையாகத் தீர்வு காணப் படாமல் முன்னாள் சுபாங் தோட்ட மக்களின் வீட்டு உடமை பிரச்சனை இழுபறி நிலையில் உள்ளது. இப்பிரச்சனையை மாநில மந்திரி புசார் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று முறையாகத் தீர்வு காண்பேன் என்று கோத்த டமன்சாரா தொகுதியின் நம்பிக்கை கூட்டணியின் வேட்பாளர் இசுவான் கசிம் வாக்குறுதி அளித்தார்.

எங்கள் வீட்டு பிரச்சனைக்கு முறையான தீர்வு காணுங்கள் என்று தோட்ட மக்கள் கோரிக்கை முன் வைத்தனர். தேர்தல் பிரச்சார கூட்டத்திற்கு வந்த போது இவ்வாறு கூறினார். இந்த பிரச்சாரக் கூட்டத்தில் சுபாங் நாடாளுமன்ற தொகுதியின் 3 தவணையாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சிவராசையா கலந்து கொண்டார். இதில் சிலாங்கூர் தமிழ் இன்று மாத இதழ் மற்றும் இணைய தள பத்திரிக்கையின் உயர் அதிகாரியான ஜஸ்தினும் கலந்துக் கொண்டார். இந்த பிரச்சாரக் கூட்டத்தை கோத்த டமன்சாரா தொகுதியின் இந்திய சமுதாய தலைவர் திருமதி தேவி ஏற்பாடு செய்திருந்தார்.

கடந்த 7 ஆண்டுகளாக தங்களது வீட்டு பிரச்சனை முறையாக தீர்வு காணப் படாததால் மக்கள் கொதிப்படைந்து இருந்தனர். வீட்டு பிரச்சனை தீர்வு கிடைக்காததால் மக்கள் ஆத்திரம் அடைந்திருப்பதை உணர்ந்த இசுவான் முறையாக தீர்வு காண்பேன் என்ற வாக்குறுதியை வழங்கினார். ஷா ஆலம் நகராண்மை கழக உறுப்பினராகச் சேவையாற்றியுள்ளார். அப்போது இப்படி பட்ட பிரச்சனைகளை எதிர் நோக்கி உள்ளேன். ஆகவே இந்த பிரச்சனைக்கு முறையாக தீர்வு காண்பேன்.

சிலாங்கூர் மாநில அரசு பிரத்தியேகமாக வழங்கியுள்ள காப்புறுதி திட்டம் குறித்து விளக்கமளித்தார். நிகழ்விற்கு வருகை புரிந்திருந்த மக்களை வரவேற்று பேசினார் சிவராசா. அவர் சுங்கை பூலோ தொகுதியின் தலைவராக சேவையாற்றி வருகிறார்.

## பூர்வீகக் குடியினரின்

### பொது வசதிகள் மேம்படுத்தப்படும்



**செமினி,** மாநிலத் தேர்தலில் செமினி தொகுதியில் பாரிசான் நேஷனல் (BN) வேட்பாளர் வெற்றி பெற்றால், பூர்வீகக் குடியினர் கிராமங்களில் பொது வசதிகளை மேம்படுத்துவதில் உறுதியாக உள்ளார்.

அவர்களின் வசதிகளை மேம்படுத்துவதோடு, பூர்வீகக் குடியினர் குழந்தைகளுக்கு ஆங்கிலம் கற்பிக்க ஆசிரியர்களை நியமிப்பது டன் கணினி மையத்தையும் உருவாக்குவதாக வான் சுலைக்கா அனுவா கூறினார்.

"பூர்வீகக் குடியினர் கல்வியில் பின் தங்காமல் இருப்பதை உறுதி செய்ய விரும்புகிறேன். அதனால், நான் ஒரு பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர்களின் சமூகத்திற்கான தொழில் திட்டமிடலின் ஈடுபடுவேன்.

"எனக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள். செமினி தொகுதி மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவேன் என்று நான் உறுதியளிக்கிறேன்" என்று 49 வயதான வேட்பாளர் கூறினார்.

மாநிலத் தேர்தலில் பாரிசான் நேஷனல் வேட்பாளர் பெரிகாத்தான் நேஷனல் (PN) பிரதிநிதி நுஷி மஹ்ஃபோட்ஸை எதிர்த்து போட்டியிடுகிறார்.

## பாயா ஜெரஸ்

### வெள்ளப் பிரச்சனைக்கு தீர்வு



**ஷா ஆலாம்,** பாயா ஜெராஸ் வெள்ளப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான முயற்சி எளிதானது அல்ல, ஆனால் முகமட் கைருடின் ஓத்மான் அதைத் தீர்ப்பதில் உறுதியாக இருக்கிறார்.

தனது கட்சி ஏற்கனவே சுங்கை கெடோன்டோஙை ஆழப்படுத்தி உள்ளதாகவும், சுங்கை பூலோவை முறையாக விரிவுபடுத்துதல் மற்றும் ஆழப்படுத்துதல் நடவடிக்கை மேற்கொள்வதாகவும் பக்காத்தான் ஹராப்பான் வேட்பாளர் கூறினார்.


"சுங்கை கெடோன்டோங் ஆழப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது, ஆனால் மற்றொரு சிக்கல் எழுந்துள்ளது அதாவது வேகமான நீரோட்டம் குபு காஜா கிராமத்தைச் சுற்றியுள்ள மக்களை பாதிக்கிறது.

சுங்கை சுபாங் ஆற்றின் கரையை உயர்த்தும் பணியை முடித்துவிட்டு, சுங்கை பூலோ பகுதியில் உள்ள ஆற்றை முறையாக விரிவுபடுத்தி வெள்ளப் பிரச்சனையை முடிவுக்குக் கொண்டு வர அரசை வலியுறுத்துவேன்," என்றார்.

கனமழை பெய்தால் சுங்கை பூலோ, சுங்கை சுபாங், சுங்கை கெடோன்டோங் ஆகிய இடங்களில் ஆற்று நீர் பெருக்கெடுத்து ஓடுவதால் பாயா ஜாரஸில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு கம்போங் குபு காஜாவில் வசிப்பவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

"இந்தப் பிரச்சனையை அரசியல் மூலதனமாக விளையாட முயலும் கட்சிகளிடம் இதனை தீர்க்க என்ன திட்டம் உள்ளது. ஜெராஸ் சதுப்பு நிலத்தில் உள்ள அனைத்து நதிகளின் நிலையும் சம்பந்தப்பட்ட கட்சிகளுக்குத் தெரியாது என்று நான் உத்தரவாதம் அளிக்கிறேன்," என்று அவர் கூறினார்.

# பல பகுதிகளில் சேவை மையக் கவுண்டர்கள் திறக்கப்படும்



**அம்பாங் ஜெயா,** உலு கிள்ளாங் தொகுதியில் பக்காத்தான் ஹராப்பான் (ஹரப்பான்) வேட்பாளர் உள்ளூர் சமூகத்தின் தேவைகளை நிர்வகிப்பதற்கு பல பகுதிகளில் சேவை மையக் கவுண்டர்களை திறக்க திட்டமிட்டுள்ளார்.

மாநில அரசு வழங்கும் பல்வேறு உதவிகளைப் பற்றிய தகவல்களைப் பரப்புவதற்கான தகவல் மையமாகவும் இந்த கவுண்டர்கள் செயல்படும் என்று ஜூவைரியா சுல்கிஃப்லி கூறினார்.

இளம் வாக்காளர்கள் மற்றும் பெண்களை அணுகுவது உலு கிள்ளாங் தொகுதியில் போட்டியிடும் பக்காத்தான் ஹராப்பான் வேட்பாளரின் உத்திகளில் ஒன்றாகும்.

எட்டு நாட்கள் பிரச்சாரத்தில், அவரது தரப்பு 20க்கும் மேற்பட்ட வாக்குப்பதிவு மாவட்டங்களுக்கு சென்றுள்ளது என ஜூவைரியா சுல்கிஃப்லி கூறினார்.

"இந்த பிரச்சாரத்தின் இரண்டாவது சுற்றில், இரு மனதாக இருக்கும் வாக்காளர்கள் மீது கவனம் செலுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம், ஏனெனில் நான் பலருக்குத் தெரிந்த ஒருவரை எதிர்த்து போட்டியிடுகிறேன்.

"எனவே, நாங்கள் இரவும் பகலும் கடுமையாக உழைக்கிறோம், சந்தைகள், அடுக்குமாடி குடியிருப்புகள் என வீடு வீடாகச் சென்று தன்னை அறிமுகப் படுத்திக் கொள்கிறோம் (பிரச்சாரம்)," என்று அவர் கூறினார்.

மேலும், உழவர் சந்தையை வணிகர்கள் எழுப்பிய புதிய தளத்தை மாற்றுவது குறித்து தனது கட்சி ஆராயும் என்றும் ஜூவைரியா விளக்கினார்.

"இது உண்மையில் இரண்டாவது தளம் ஆகும், சுற்றியுள்ள வளர்ச்சி காரணமாக, வர்த்தகர்கள் மீண்டும் நகர்த்தப்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

டிபிகேல் (DBKL) மற்றும் ப்மா (Fama) இடையே வர்த்தகர்களின் நலனைப் பாதுகாக்க மேலும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன," என்று அவர் கூறினார்.



# பள்ளிகளின் உள்கட்டமைப்பை பழுதுபார்ப்பதற்கும் RM250,000 மேல் ஒதுக்கீடு

**ஷா ஆலம்,** சுங்கை ரமால் தொகுதி, அப்பகுதியில் உள்ள பல பள்ளிகளின் உள்கட்டமைப்பை பழுதுபார்ப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் RM250,000 க்கு மேல் ஒதுக்கீடு செய்துள்ளது.

2018 முதல் பழுதுபார்க்கப் பட்டு மேம்படுத்தப்பட்ட பள்ளி வசதிகளில் கழிப்பறைகள், திடல்கள், அரங்குகள் மற்றும் சபைக்கூடல் போன்றவை அடங்கும் என்று சுங்கை ரமால் தொகுதி உறுப்பினர் மஸ்வான் ஜோஹர் கூறினார்.

"முன்னதாக, கூட்டாட்சி அளவில் பல நிர்வாக மற்றும் தலைமை மாற்றங்கள் இருந்தன. அதனால் பள்ளி மேம்பாட்டு பணிகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டது.

"எனவே இதுவரை பள்ளிக் கழிவறை பழுது பார்த்தல், மண்டபத்தை மேம்படுத்துதல் போன்ற பல தேவைகளை நான் நிறைவேற்றினேன்," என்று அவரைத் தொடர்பு கொண்டபோது கூறினார்.

சுங்கை ரமால் தொகுதிகளில் வசிப்பவர்களின் கல்வி, நலன் மற்றும் சுகாதாரம் ஆகிய அம்சங்களுக்கு தான் முன்னுரிமை வழங்குவதாக மஸ்வான் கூறினார். எனவே, அதனை முன்னிட்டு பல உதவிகள் வழங்கப்படுகின்றன என்றார்.

"சுங்கை ரமால் தொகுதி, கடந்த ஆண்டு முதல் இப்போது வரை படிவம் ஆறிலிருந்து பல்கலைக்கழக நிலை வரையிலான மாணவர்களுக்குச் சுமார் RM100,000 மதிப்புமிக்க மடிக்கணினிகளை நன்கொடையாக வழங்கியுள்ளது.

"இத்திட்டம் B40 குடும்பங்களுக்கு உட்பட்டது மட்டுமல்ல, அதிகமான பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

"சமீபத்தில், பள்ளிக்குத் திரும்பும் உதவி பெற்ற 135 பேருக்குத் தாபோங் ஹாஜி கணக்குகளைத் திறப்பதற்காக RM1,350 நன்கொடையாக வழங்கப்பட்டது," என்று அவர் குறிப்பிட்டார்.

# பத்து திகா தொகுதி - வேட்பாளர் அறிமுகம்



**கோம்பாக்,** பத்து திகா தொகுதிக்கான பக்காத்தான் ஹராப்பான் வேட்பாளர் எதிர்வரும் மாநிலத் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்.

பொது சுகாதாரம், ஒற்றுமை, பெண்கள் மற்றும் குடும்ப அதிகாரம் ஆகியவற்றிற்காக எஸ்கோவின் சிறப்பு அதிகாரியாக இருந்த அனுபவம், பல்வேறு தரப்பினரைச் சமாளிப்பதை எளிதாக்குகிறது என்று 37 வயதான டேனியல் அல்-ரஷித் நம்புகிறார்.

"ஷா ஆலம் மாநகராட்சியின் முன்னாள் உறுப்பினராக, மக்களுக்கு உதவி செய்யும் அனைவரையும் வழி நடத்தும் அனுபவம் என்னை அடுத்த கட்டத்திற்கு அழைத்துச் செல்லும் என்று நம்புகிறேன்" என்று ஜூலை 30 அன்று அவர் கூறினார். அவர் யுனிவர்சிட்டி டெக்னாலஜி மாரா (யுஐடிஎம்) பெர்லிஸில் இருந்து மேலாண்மை கணிதத்தில் பட்டம் பெற்றவர், உட்பட பிற பதவிகளை வகித்துள்ளார்:

– சிலாங்கூர் சிறப்பு குழந்தைகள் துறை தலைவர் (அனிஸ்)
– சிலாங்கூர் குழந்தைகள் பாரம்பரிய அறக்கட்டளைத் துறைத் தலைவர்
– சிலாங்கூர் ஊனமுற்றோர் நடவடிக்கை கவுன்சில் **(OKU)** குழுவின் உறுப்பினர்

சிலாங்கூர் ஹரப்பான் இளைஞரின் தலைவரான டேனியல் மறைந்த பிரபல கலைஞர் ஹருன் சலீம் பாச்சிக்கின் மகன் ஆவார்.

பெரிகாத்தான் நேசனலில் இருந்து முன்னாள் அமைச்சர் டத்தோஸ்ரீ ரினா ஹாருன் மற்றும் முடாவிலிருந்து சையிடா இஸ்ஸாதி நூர் ரசாக் மைடின் ஆகியோர் அடங்கிய மூன்று முனைப் போட்டியை டேனியல் எதிர்கொள்கிறார்.

# ஏழு திட்டங்களை அறிமுகப்படுத்தினார்



**டெங்கில்,** டெங்கில் தொகுதியில் உள்ள மக்களின் நல்வாழ்வுக்காக பாரிசான் நேஷனல் (பிஎன்) வேட்பாளர் ஏழு திட்டங்களை அறிமுகப்படுத்தினார்.

சுகாதாரம், உள்கட்டமைப்பு, மதம், கல்வி, விளையாட்டு, நலன் மற்றும் பொருளாதார ஆகியவை அதில் அடங்கும் என்று நூரஸ்லி கூறினார்.

"நான் எனது பகுதியில் உள்ள மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க விரும்புகிறேன்.

"இந்தச் சலுகை டெங்கிலில் உள்ள சமூகத்தின் தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யக் கூடியதாக இருப்பதை நான் காண்கிறேன், இந்த பகுதியை நாங்கள் மேம்படுத்த வேண்டும்," என்று அவர் சிலாங்கூர்கினியிடம் கூறினார்.

மாநில மற்றும் மத்திய அரசுகளுடன் இணைந்து வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பது டெங்கில் மக்களுக்கு நன்மையை அளிக்கிறது என 45 வயதான அந்த வேட்பாளர் தெரிவித்தார்.

"எங்கள் கொள்கைகள் மாநில நிர்வாகத்துடன் ஒத்துப்போவதால், இந்த பகுதியை நாங்கள் சிறப்பாக மேம்படுத்த முடியும், மேலும் இது குடியிருப்பாளர்களுக்கு நன்மை பயக்கும்," என்று அவர் கூறினார்.

மாநிலத் தேர்தலில் **(PRN)** அத்தொகுதியில் நான்கு முனைப் போட்டி நிலவுகிறது.

# 18 சீரமைப்பு திட்டங்களில் ஒன்பது நிறைவடைந்துள்ளன

**ஷா ஆலம்,** பென்யாயாங் சிலாங்கூர் திட்டத்தின் (PSP) கீழ் தஞ்சோங் சிப்பாட் தொகுதியில் மேற்கொள்ளப்பட்ட 18 சீரமைப்பு திட்டங்களில் ஒன்பது இதுவரை RM1.02 மில்லியன் செலவில் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது.

பொது மண்டபம், மசூதி, ஃபுட்சல் கோர்ட், பொது மேடையை சீரமைத்தல், சாலையை சரிசெய்தல் மற்றும் செப்பனிடுதல் மற்றும் 20 சோலார் விளக்கு கம்பங்களை நிறுவுதல் ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும் என்று தொகுதியின் நடப்பு உறுப்பினர் கூறினார்.

"ஒன்பது திட்டங்கள் நிறைவு செய்யப்பட்ட நிலையில் மீதமுள்ளவை விரைவில் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"மேம்படுத்தப்பட்ட வசதிகளால் குடியிருப்பாளர்கள் பயனடைந்திருப்பதாக நாங்கள் நம்புகிறோம், இதனால் அவற்றை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம் மற்றும் அவைகளைச் சேதப்படுத்தாது பயன்படுத்த வேண்டும்" என்று போர்ஹான் அமன் ஷா சிலாங்கூர்கினியிடம் கூறினார்.

பென்யாயாங் சிலாங்கூர் திட்டம் என்பது கட்டிட வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட மாநில அரசின் முன் முயற்சியாகும் மற்றும் செப்டம்பர் 2022 முதல் அனைத்து 56 தொகுதிகளிலும் இது செயல் படுத்தப்பட்டது.

2023 பட்ஜெட்டில், டத்தோ மந்திரி புசார், மக்களின் நலனுக்காக சிறிய திட்டங்களை வழங்குவதன் மூலம் உள்ளூர் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் மற்றும் மேம்படுத்தும் பென்யாயாங் சிலாங்கூர் திட்டத்திற்கு RM28 மில்லியன் ஒதுக்கீட்டை அறிவித்தார்.

இந்தத் திட்டத்தின் முன் உரிமையானது உள்கட்டமைப்பு பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் வருடாந்திர பராமரிப்பு ஒதுக்கீடுகள் இல்லாத அரசு பொது வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியது என்று டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.



# கோம்பாக் செத்தியா தொகுதியில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும்



**கோம்பாக்,** மாநிலத் தேர்தலில் (பிஆர்என்) கோம்பாக் செத்தியா தொகுதியில் வெற்றி பெற்றால், ஏழு பாரம்பரிய கிராமங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதாகப் பாரிசான் நேஷனல் (பிஎன்) வேட்பாளர் உறுதியளித்துள்ளார்.

மேலும், டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரியிடம் குறைந்த விலையில் வீடு கட்டும் திட்டம் குறித்து பேசுவதாக டத்தோ மெகாட் சுல்கர்னைன் ஓமர்டின் தெரிவித்தார்.

"இப்போதெல்லாம் இங்குள்ள பல இளைஞர்கள் குறிப்பாகத் திருமணத்திற்குப் பிறகு மலிவு விலையில் வீடு தேடுவதற்காக வேறு இடத்திற்குக் குடிபெயர்கிறார்கள், எனவே நான் தேர்ந்தெடுக்கப்பட்டால் அதிக மலிவு விலை வீடுகளுக்கு போராடுவேன்.

"தற்போதைய மாநில அரசு தொடர்ந்து ஆட்சியில் இருந்தால், இந்த விஷயத்தை செயல்படுத்த முடியும் என்று நான் நம்புகிறேன், ஏனெனில் டத்தோ மந்திரி புசார் மக்களுக்கு உதவ உறுதியுடன் இருக்கிறார்," என்று அவர் கூறினார்.

சம்பந்தப்பட்ட கிராமங்கள் கம்போங் சுங்கை புசு, கம்போங் சுங்கை சின்சின் மற்றும் கம்போங் சங்கட் ஆகியவை ஆகும்.

இதற்கிடையில், கம்போங் தெங்கா லெம்பா மற்றும் கோம்பாக் ஜெயாவில் வெளி ஆட்களால் சட்டவிரோதமாகக் குப்பை கொட்டும் பிரச்சனையை தீர்க்க மாநிலப் பிஎன் இணைப்புக் குழுவின் தலைவர் உதவுவார்.

மாநில தேர்தலில் மெகாட் சுல்கர்னைன், முகமட் ஹில்மன் இடாம் (பெரிகத்தான் நேஷனல்) மற்றும் முகமட் சலீம் முகமட் அலி (பேபாஸ்) ஆகியோரை எதிர்கொள்வார்.

# கோலக் கிள்ளான் மேம்பாட்டுப் பகுதிகளில் வடிகால் மறுஆய்வு செய்ய - அஸ்மிஸாம் வலியுறுத்து

**ஷா ஆலம்,** மோசமான வெள்ளப் பேரிடர் ஏற்படுவதைத் தவிர்க்க புதிய மேம்பாட்டுப் பகுதிகளில் அங்கீகரிக்கப்பட்ட வடிகால் முறையை மறுஆய்வு செய்யும்படி கோலக் கிள்ளான் சட்டமன்ற உறுப்பினர் வலியுறுத்தியுள்ளார்.

பூலாவ் இண்டா பாரம்பரிய கிராமப் பகுதியில் இத்தகைய ஆய்வினை கிள்ளான் நகராண்மைக் கழகமும் வடிகால் மற்றும் நீர்ப்பாசனத் துறையும் மேற்கொள்ள வேண்டும் என்று அஸ்மிஸாம் ஸமான் ஹூரி கேட்டுக் கொண்டார்.

முன்பு இவ்வட்டாரம் குடியிருப்பு பகுதியாக இருந்தது. தற்போது அது தொழில்பேட்டைப் பகுதியாக மாற்றப்பட்டு மைரா கார்டன் திட்டமும் இங்கு மேற்கொள்ளப்படுகிறது இதனால் இங்குள்ள மக்களுக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இதனால் கன மழை பெய்யும் போதெல்லாம் வெள்ளம் ஏற்படுகிறது. கடந்தாண்டு டிசம்பர் 17 ஆம் தேதி மிகவும் மோசமான வெள்ளப் பாதிப்பும் இங்கு ஏற்பட்டது. கிள்ளான் நகராண்மைக் கழகம் அங்கீகரித்த வடிகால் முறையும் நிர்ணயிக்கப்பட்ட தரத்தைக் கொண்டிருக்கவில்லை என்றார் அவர்.

மாநில சட்டமன்றத்தில் இன்று



மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் அவர்களின் உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் கூறினார்.

கம்போங் தெலுக் கோங் பகுதியில் கடந்தாண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட சாலைகள் இன்னும் சீரமைக்கப்படாமலிருப்பதாக கூறிய அவர், இவ்விவகாரத்தில் உரிய கவனம் செலுத்தும்படி கிள்ளான் நகராண்மைக் கழகம் மற்றும் பொதுப்பணித் துறையைக் கேட்டுக் கொண்டார்.

# நேர்த்தியான ஆட்சியையே மக்கள் வரவேற்கின்றனர்

மாநிலத்தின் வளம் மக்களுக்கே என்ற புதிய கோட்பாட்டுடன் 2008ம் ஆண்டில் சிலாங்கூரில் ஆட்சியை தொடங்கிய மக்கள் கூட்டணி இன்று நம்பிக்கை கூட்டணியாக மாற்றம் கண்டிருந்தாலும், அதன் மக்கள் நல திட்டங்கள் எப்போதும் நாட்டில் மற்ற மாநிலங்களுக்கு மட்டுமின்றி தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் ஒரு முன்னோடியாக உள்ளது என்றால் மிகையாகாது .

மத்திய அரசின் பொறுப்பில் இருந்த கல்வி மற்றும் போக்குவரத்து துறைகள் மத்திய அரசின் மானியத்தை போதிய அளவில் பெறாததால் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்க்கும் வண்ணம் 2008 ம் ஆண்டில் கல்விக்கும் , சாலை பாலங்கள் கட்ட நிதி வழங்கிய சிலாங்கூர் மாநில அரசு , 2020 ஆம் ஆண்டில் கோவிட் 19 நோய் தடுப்புக்கு மருத்துவ உபகரணங்களுக்கு வாங்கவும் நிதி ஒதுக்கீடு செய்த முதல் மாநிலமாக விளங்கியது.

அதன் பின் கோடி கணக்கான வெள்ளிகளை கோவிட் தடுப்பூசி வாங்கவும் , மக்கள் வருமானமின்றி தவித்த காலத்தில் அவர்களின் சுமையை குறைக்க பல முன்மாதிரி திட்டங்களை முன்னெடுக்கவும் ஒதுக்கீடுகளை செயத ஒரே மாநிலம் சிலாங்கூர்.

மக்கள் தேவைகளை அறிந்து தொடர்ந்து பல திட்டங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்தி வரும் மந்திரி புசார் டத்தோ ஶ்ரீ அமிருடின் ஷாரி தொடர்ந்து , கல்விக்கு என்ன தேவை , மாணவர்களுக்கு என்ன வேண்டும், தாய்மார்களுக்கு எது தேவை என்று ஒவ்வொன்றாக ஆராய்ந்து மாநிலத்தில் மக்கள் இன்னும் நேர்த்தியான வாழ்க்கை தரத்தை அடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் 49 புதிய திட்டங்கள் அல்லது மேம்படுத்த பட்ட திட்டங்களை இந்த தேர்தலில் முன் வைத்துள்ளதை மக்கள் வரவேற்கின்றனர்,

## சிறந்த திட்டங்கள்



### இளைஞர்களுக்கு பயிற்சி கால ஊதியம்

``பயிற்சி மாணவர்களுக்கான கொடுப்பனவு அவசியம், ஏனெனில் அவர்களும் மற்ற பணியாளர்கள் போலவே பயிற்சி காலங்களில் பணிபுரிகின்றனர் அவர்களுக்கு இன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப ஒரு தொகை அளிப்பது சிறந்த முடிவு.

``டத்தோ மந்திரி புசாரின் அறிவிப்பு உண்மையில் பயிற்சி மாணவர்களின் பணிக்கு ஏற்ற ஊதியம் வழங்க முதலாளிகளின் கண்களைத் திறந்தது உள்ளது. இந்தச் திட்டம் பயிற்சி மாணவர்களுக்கு உதவியாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்`` என மாணவி கரிஷா மாயா (27) தெரிவித்துள்ளார்.

### கல்வி



இப்பொழுது சில பிற்போக்குவாதிகள் நம் நாட்டில் நடத்தப்படும் தாய்மொழிக்கல்வியையே கேள்வி எழுப்பும் வேளையில் சிலாங்கூர் இலவசமாக கல்வியை நடத்த அதுவும் மலாய், ஆங்கிலம், மாண்டரின் , தமிழ், ஜப்பான், கொரியன் போன்ற மொழிகளை கற்கலாம் என்பது அருமையான முற்போக்கு திட்டம்.

``இலவச மொழி கற்றல் வகுப்புகளை வழங்குவது சிலாங்கூர் அரசாங்கத்தின் ஒரு சிறந்த திட்டமாகும். இது சிலாங்கூர் மக்களிடையே, குறிப்பாக மாணவர்களிடையே பல்வேறு மொழிகளின் திறனை அதிகரிக்கும்``.

``இம்முயற்சி குறைந்த திறன் கொண்டவர்கள் வெளிநாட்டு மொழியைக் கற்க வாய்ப்பளிக்கும்`` என அரசாங்க பணியாளரான இப் சியான் (26) கூறினார்.

### பொருளாதாரம்



``தாவரான் கித்தா சிலாங்கூரில் திட்டமிடப்பட்டவை நிறைவேற்றப்படும் என்று நம்புகிறேன். முக்கியமாக சபாக் பெர்ணமிலிருந்து கிள்ளான் வரையிலான இரயில் பாதையை நான் பார்க்க விரும்புகிறேன்``.

``சுங்கை புசார் மக்கள் பெறும் நன்மைகள் போல் பிற கிராமப்புற சமூகங்களும் பெறுகின்றனர்,` என சுயத் தொழில் செய்யும் அரிவின் சம்சூரி (70) தெரிவித்தார்.

### பெண்கள் & நலன்



பெண்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவது ஒரு நல்ல திட்டமாகும். உண்மையில், பெண்கள், குறிப்பாக வேலை செய்பவர்கள் மற்றும் சிறு குழந்தைகள் உடையவர்கள் இதுபோன்ற உதவிகளை எதிர்பார்க்கிறார்கள்.

பொதுவாக வேலை செய்யாத பெண்களுக்கு உதவி வழங்கப்படுகிறது, தற்போது அதில் வேலை செய்யும் பெண்களும் இணைக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சியாக உள்ளது,`` என ருத்ரேஸ்வரி (37) கருத்து தெரிவித்துள்ளார்.

# பெரிக்கத்தான் வென்றால் பொருளாதாரம் நலிவடையும்



**ஷா ஆலம்;-** சிலாங்கூர், நெகிரி செம்பிலான் மற்றும் பினாங்கு ஆகிய மாநிலங்களில் பெரிக்கத்தான் நேஷனல் வெற்றி பெற்றால் அந்த மூன்று மாநிலங்களிலும் பொருளாதாரம் பெரிதும் நலிவடையும் என பொருளாதார நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட மாநிலங்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பு, அந்நிய நேரடி முதலீடு மற்றும் ஆண்டு வருமான கணிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இந்த மதிப்பீடு செய்யப்படுவதாக அந்நிபுணர்களை மேற்கோள் காட்டி ஃப்ரி மலேசியா டுடே இணைய ஏடு செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த மூன்று மாநில அரசு நிர்வாகம் புதிய கட்சியிடம் மாறும்போது அந்நிய முதலீட்டுச் சூழலில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று மலேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஜெப்ரி வில்லியம்ஸ் கூறினார்.

எனினும், இந்த மூன்று மாநிலங்களையும் பக்கத்தான் ஹராப்பான் மற்றும் பாரிசான் நேஷனல் கூட்டணி தக்க வைத்துக் கொள்ளும் எனத் தாம் நம்புவதாக அவர் தெரிவித்தார்.

கடந்த 2008ஆம் ஆண்டு முதல் பக்கத்தான் ஆட்சி செய்து எதிர்வரும் சிலாங்கூர் மற்றும் பினாங்கு ஆகிய மாநிலங்கள் கடந்த 2021ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 30.29 விழுக்காட்டு பங்களிப்பை வழங்கின. அதே வேளையில் பெரிக்கத்தான் நேஷனல் வசமுள்ள கெடா, கிளந்தான், திரங்கானு ஆகிய மாநிலங்கள் 10.88 விழுக்காட்டு பங்களிப்பை மட்டுமே வழங்கின.

கடந்த 2021ஆம் ஆண்டில் 24.8 விழுக்காடாக இருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சிலாங்கூரின் பங்களிப்பு கடந்தாண்டு 25.5 விழுக்காடாக உயர்ந்துள்ளதாக மலேசிய புள்ளி விபரத்துறையின் தரவுகள் கூறுகின்றன.

Diterbikan oleh **Media Selangor Sdn Bhd** (Sebelumnya dikenali **Communication Sdn Bhd**), Aras 11, Menara Bank Rakat, No1 Jalan Indah 14/8, Seksyen 14, 4000 Shah Alam, Selangor. Dicetak oleh **Ultimate Print Sdn Bhd** Lot 2, Jalan Sepana 15/3, off persiaran Seksyen 15, 40200 Shah Alam, Selangor